Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, MAY 17, 2022

செவ்வாய்க்கிழமை மே.17, 2022 | ஒளி: 07 கதிர் 306 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE



## வரிசையில் நிற்க வேண்டாம்

அடுத்த மூன்று நாட்களுக்கு எரிபொருளுக்காக வரிசையில் நிற்க வேண்டாம் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, டுவிட்டர் பதிவொன்றின் மூலம் பொதுமக்களிடம் நேற்று (16) கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



அடுத்த சில மாதங்கள்

# மிகவும் கடினமானவை

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

“எனது நோக்கமும் அர்ப்பணிப்பும் ஒரு தனி மனிதன், ஒரு குடும்பம், அல்லது ஒரு கூட்டத்தை பாதுகாப்பது அல்ல, முழு நாட்டினதும் மக்களை காப்பாற்றுதே, இளைஞர்களின் எதிர்காலத்தை காப்பாற்றுவதே. உயிரை பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்த சவாலை வெற்றி கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு நேற்று (16) மாலை 6.30க்கு ஆற்றிய விசேட உரையின்போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

உரையில் அவர் மேலும் தெரிவித்தாவது, “பிரதமர் பதவியை நான் கேட்கவில்லை. நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி எனக்கு அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி P2

அமைச்சுப் பதவிகளை ஏற்கமாட்டோம்

## தேசிய சபை, பாராளுமன்ற குழுக்களில் பங்குபற்ற தயார்

### 11 சுயாதீன குழுக்கள் பிரதமரிடத்தில் தெரிவிப்பு

பா.நிரோஷ்

பிரதமர் தலைமையிலான அமைச்சரவையில் தாம் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்ளப்போவதில்லை, எனினும் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அரசாங்கத்தை முழுமையாக ஆதரிக்க தயாராக உள்ளதாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தவும் 11 சுயாதீன அணிகளும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

மனித உரிமை மீறல்களை

## ரணிலால் மெஜிக் செய்து மாற்றிவிட முடியாது

பா.நிரோஷ்



பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று க்கொண்டார் என்பதற்காக நாட்டில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களை மாயாஜால வித்தைகளை செய்து மாற்றிவிட முடியாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், அமைதியான போராட்டக்காரர்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் இதுவரையில் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இடைக்கால பட்ஜெட்டை தயாரிக்கின்றார் ரணில்

### பெரும்பான்மையை நிரூபிக்க கட்சிகளின் ஆதரவையும் பலப்படுத்திக்கொண்டுள்ளார்

பா. நிரோஷ்



நாட்டின் பொருளாதார கட்டமைப்பை மறுசீரமைக்கும் விதமாக இடைக்கால வரவு செலவு திட்டமொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயாரித்து வருவதாகவும், அடுத்த ஆறுமாத காலத்துக்கான விசேட வேலைத்திட்டங்களை பாராளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

பா.நிரோஷ்

நாட்டில் பெரும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பாராளுமன்றம் இன்று (17) சபாநாயகர் தலைமையில் கூடுகிறது.

தொடர்ச்சி P2



தேவையான மழை பெய்வதால்

## அதிகபட்சம் 5 மணிநேர மின்வெட்டு

நீர்த் தேக்கங்களை அண்மித்த பகுதிகளில் தேவையான மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்று வருவதால், அனல் மின் நிலையங்களைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துள்ள இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் அதிகபட்சமாக ஐந்து மணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்படக் கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



உண்டியல் விவகாரம்

## 50,000 யூரோவுடன் நபரொருவர் கைது

பெபிலியான பிரதேசத்தில் உண்டியல் முறையினூடாக பணம் கடத்துவதற்காக வெளிநாட்டு நாணயங்களை வைத்திருந்த நபர் ஒருவர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ரணிலின் பின்னணியில் இந்தியா செயற்படவில்லை

### சம்பந்தனிடம் பாக்லே தெரிவிப்பு



ரணில் விக்ரமசிங்கவைப் பிரதமராக்கியதன் பின்னணியில் இந்தியா செயற்பட்டதாக பலரும் கூறுகின்ற போதும் தாங்கள் அவ்வாறு எந்தவித முயற்சிகளையும் முன்னெடுக்கவில்லை எனவும், தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் யார் பிரதமராக பதவியை பொறுப்பேற்றாலும் அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க இந்தியா தயாராக இருப்பதாகவும் இலங்கைக்கான இந்தியத் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர் சம்பந்தனிடத்தில் தெரிவித்துள்ளார்

தொடர்ச்சி P2

அமைச்சுப் பதவிகளை பெறாது

## ரணிலுக்கு ஆதரவளிக்க சஜித் அணி தீர்மானம்

பா.நிரோஸ்

அமைச்சுப் பதவிகள் எதனையும் பெறாது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புதிய இடைக்கால அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளதோடு,

தொடர்ச்சி P2

அரசியல் தீர்வு குறித்து

## ரணிலுக்கு புதிதாக தெளிவுபடுத்த வேண்டியதில்லை

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் மூலமாகவே நாட்டின் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வினை எட்ட முடியும். அது குறித்து இப்போதாவது அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.

தொடர்ச்சி P2





அனைத்து பாடசாலைகளும்

## இன்று முதல் திறக்கப்படும்

### மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகளுக்கு தடை

நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளும் இன்று (17) செவ்வாய்க்கிழமை திறக்கப்படும் என கல்வி அமைச்சு, நேற்று (16) தெரிவித்தது.

தொடர்ச்சி P2



## 3 மணி நேரம் 40 நிமிடங்கள் மின்வெட்டு

### திருத்தும் பணிகளும் தாமதிக்கும்

எரிபொருள் மற்றும் நீர் பற்றாக்குறை காரணமாக இன்றையதினம் (17) மூன்று மணித்தியாலங்கள் 40 நிமிடங்களுக்கு மின்வெட்டை அமுல்படுத்தப்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று (16) அனுமதி வழங்கியது.

அதன்படி, ‘ஏ’ முதல் ‘டபிள்யூ’ வரையிலான 20 வலயங்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை 2 மணி நேரமும், மாலை 5 மணி முதல் இரவு 9மணி வரை 1 மணிநேரம் 40 நிமிடங்களும் மின் வெட்டு அமுல்படுத்தப்படும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மிகவும் கடினமானவை

2022 ஆரம்பத்தில் கடந்த அரசாங்கத்தின் வரவுசெலவு திட்டத்தில் 2.3 ட்ரில்லியன் ரூபாய்கள் வருமானமாக உள்ளன என காட்டப்பட்டாலும் இந்த வருடத்துக்கான உண்மையான வருமான எதிர்வு கூறல் 1.6 ட்ரில்லியன் ரூபாய்களாகவே உள்ளன. 2019 நவம்பர் மாதத்தில் எமது அந்நியச் செலாவணி கையிருப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இருந்தன. ஆனால் இன்று திறைசேரியால் ஒரு மில்லியன் டொலர்களைக்கூட தேடிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்போது நமது கையிருப்பில் ஒரு நாளைக்குத் தேவையான பெற்றோல் மட்டுமே உள்ளது. நேற்றுமுன்தினம் வந்த டீசல் கப்பலால் இன்றில் இருந்து உங்களின் டீசல் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும்.

இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் மே 19 மற்றும் ஜூன் 01 ஆகிய திகதிகளில் மேலும் இரண்டு டீசல் கப்பல்களும் மே 18 மற்றும் மே 29 இரண்டு பெற்றோல் கப்பல்கள் வரவுள்ளன.

மின்சாரத் தேவையில் நான்கில் ஒன்றை உற்பத்தி செய்ய எரிபொருளே பயன்படுத்தப்படுகிறது. இதனால் நாளாந்த மின்வெட்டு இன்னும் சில நாட்களில் 15 மணித்தியாலங்களாக மாறவும் இடமுண்டு. ஆனால் நாம் இதற்கு தேவையான நிதியை தேடிக்கொண்டுள்ளோம் .

அதே போன்று முடிந்தளவு நுகர்வோருக்கு எரிவாயுவை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை கூடிய விரைவில் தேடவேண்டும். மண்ணெண்ணெய் மற்றும் சம்பந்தமான நிலைமை இதனை விடப் பயங்கரமானது.

எரிவாயு கப்பலுக்கான கட்டணத்தை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் செலுத்த நாம் நடவடிக்கை எடுப்போம். அதன் மூலம் உங்களின் எரிவாயு பிரச்சனைகளுக்கு ஏதோவொரு தீர்வு கிடைக்கும்.

இந்த நேரம் வரை இலங்கை மத்திய வங்கி, அரச வங்கிகள், தனியார் வங்கிகள், இலங்கையில் உள்ள வெளிநாட்டு வங்கிகள் அனைத்தும் டொலர் இல்லாத சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளன.

14 அத்தியாவசிய மருத்துவ மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளமையும், அதில் இரண்டையாவது,
இருதய நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்து, மற்றும் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்து ஆகியவையே அந்த இரண்டு மருந்துகளாகும். ஆனால் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்துக்கு மாற்று மருந்து எதுவும் இல்லை.

இதற்கிடையில் 2022 ஆண்டுக்காக முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி வரவுசெலவு திட்டத்துக்கு பதிலாக புதிய வரவு-செலவு திட்டமொன்றை முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனை சலுகை வரவு-செலவு திட்டமாக முன்வைக்கவே நான் திட்டமிடுகிறேன்.

அதேபோல், இதுவரை நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீ லங்கன் விமான சேவையை தனியார் மயப்படுத்துமாறு நான் முன்மொழிகின்றேன்.

குறுகிய காலத்துக்கு நாம் இதனை விட மோசமான காலத்திற்கு முகம் கொடுக்கப் போகின்றோம். பணவீக்கம் மேலும் அதிகரிக்க இடமுள்ளது.

அரசாங்கம் தற்போது 92 பெற்றோல் லீற்றர் ஒன்றில் ரூ. 84.38 , 95 பெற்றோல் லீற்றர் ஒன்றில் ரூ. 71.19 , டீசல் லீற்றர் ஒன்றில் ரூ. 131.55 சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றில் ரூ. 136.31 மற்றும் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றில் ரூ. 294.50 என நட்டமடைகிறது.

அதேப்போல இலங்கை மின்சாரசபை மின் அலகு ஒன்றிற்காக உங்களிடம் ரூ. 17 ஐ அறவிட்டாலும் அதன் பொருட்டு 48 ரூபாய்கள் வரை செலவு செய்கிறது.

நான் இந்த நேரத்தில் விருப்பப்படா விட்டாலும் பணத்தை அச்சடிப்பதற்கு அனுமதி வழங்க நேரிடும். அரச ஊழியர்களின் இந்த மாத சம்பளத்தை வழங்கவும், உங்களுக்கு தேவையான பொருட்கள் சேவைகளின் பொருட்டே அதனை செய்யவுள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் சில மாதங்களுக்கு நீங்களும் நானும் வாழ்க்கையில் மோசமான காலக்கட்டத்தை கடக்க நேரிடும். அதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் முகம் கொடுக்க வேண்டும். நான் மக்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு எந்தவகையிலும் விரும்பவில்லை.

எதிர்வரும் சில மாதங்களில் எமது நட்பு நாடுகளின் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கும். அவர்கள் எமக்கு உதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர். அதன் பொருட்டு எதிர்வரும் சில மாதங்கள் நாம் பொறுமையுடன் இருக்க வேண்டும்.

மண்ணெண்ணெய், எரிவாயு, எரிபொருள் வரிசை இல்லாத நாடு, மின்சாரம் துண்டிக்கப்படாத நாடு , விவசாயத்தை சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய வசதிகள் உள்ள நாடு , இளைஞர் யுவதிகளின் நாளையதினம் பாதுகாக்கப்பட்ட நாடு, மனித வளம் போராட்டக் களத்தில் மற்றும் வரிசையில் வீணடிக்கத் தேவை இல்லாத நாடு, எல்லோரும் சுதந்திரமாக வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லக் கூடிய நாடு, மற்றும் மூன்று வேளையும் உணவு உண்ணக் கூடிய நாட்டை நாம் கட்டியெழுப்புவோம்.

நான் பொறுப்பேற்றது மிகவும் அபாயகரமான சவால். கத்தியின் மேல் நடப்பதைவிட இது பயங்கரமான சவால் மிகுந்தது. மிகவும் ஆழமானது. அடியே தெரியவில்லை. பாலங்கள் மெல்லிய கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ளன. கைப்பிடி இல்லை. என்னுடைய கால்களில் கழற்ற முடியாத பாதணிகள் போடப்பட்டுள்ளன.

அதன் அடியில் கூர்மையான இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன. குழந்தையை பாதுகாப்பாக அடுத்த பக்கம் கொண்டு செல்ல வேண்டி உள்ளது. இந்த சவாலை நான் நாட்டிற்காகவே பொறுப்பேற்றேன்.

எனது நோக்கமும் அர்ப்பணிப்பும் ஒரு தனிமனிதன், ஒரு குடும்பம், அல்லது ஒரு கூட்டத்தை பாதுகாப்பது அல்ல முழு நாட்டினதும் மக்களை காப்பாற்றுவதே, இளைஞர்களின் எதிர்காலத்தை காப்பாற்றுவதே. உயிரை பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்த சவாலை வெற்றி கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள்.

நான் எனது கடமையை நாட்டுக்காக செய்து முடிப்பேன். அது நான் உங்களுக்கு அளிக்கும் உறுதியாகும் என்றார் .

# வரிசையில் நிற்க வேண்டாம்

இந்திய கடனுதவியின் கீழ், 400,000 மெற்றிக் தொன்னுக்கும் அதிக டீசலைக் கொண்ட கப்பல் நேற்றுமுன்தினம் (15) நாட்டை வந்தடைந்தது.

அதன் மூலம் போதியளவு எரிபொருள் நாட்டுக்கு கிடைத்துள்ளது என்று தெரிவித்த அமைச்சர், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இந்திய கடனுதவியின் கீழ் மேலும் 3 எரிபொருள் கப்பல்கள் நாட்டுக்கு வருகைதரவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எனவே, நாட்டிலுள்ள 1190 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குமான எரிபொருள் விநியோகம் நிறைவடையும் வரை மூன்று நாட்களுக்கு வரிசையில் நிற்கவோ எரிபொருளை நிரப்பவோ வேண்டாம் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய சபை, பாராளுமன்ற குழுக்களில் பங்குபற்ற தயார்

சர்வக்கட்சி தலைவர்களின் ஒத்துழைப்புடன் அமையப்பெறும் தேசிய சபை மற்றும் பாராளுமன்ற குழுக்களில் தமது முழுமையான ஒத்துழைப்பை பெற்றுக்கொடுப்போம் எனவும் சுயாதீன குழுவினர் பிரதமரிடத்தில் வாக்குறுதியளித்துள்ளனர்.

எதிர்தரப்பில் இருந்துகொண்டு சுயாதீனமாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 11 கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான கலந்துரையிடல் நேற்று காலை (16) பிரதமர் அலுவலகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

புதிய அமைச்சரவையில் அமைச்சுப்பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், பாராளுமன்றத்தில் சகல வேலைத்திட்டங்களிலும் தற்காலிகமாகவேனும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் பிரதமர் கேட்டுக்கொண்டுள்ள போதிலும், தாம் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்ளப்போவதில்லை என சுயாதீன உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்லும் நபர்களுக்கு இடமளித்து பிரதமர் மற்றும் ஜனாதிபதிக்கு எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு முழுமையான ஆதரவை வழங்குவதாக அவர்கள் பிரதமரிடத்தில் தெரிவித்துள்ளதுடன், எரிவாயு, உரம், எரிபொருள் மற்றும் மருந்து தட்டுப்பாடுகளை நிவர்த்திசெய்ய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவோம், இதில் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொண்டு உதவி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு அரசாங்கத்தின் ஆரோக்கியமான தீர்மானங்களை ஆதரிக்க தாம் தயார் எனவும் கூறியுள்ளனர்.

# ரணிலால் மெஜிக்...

நாட்டின் தற்போதைய நிலவரம் குறித்து தமிழ்மிரருக்குக் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அம்பிகா சட்குணநாதன், மனித உரிமை நிலவரங்களில் ஏற்படும் முன்னேற்றங்கள் தனிமனிதரில் தங்கியிருப்பதில்லை. புதிய ஒருவர் பதவிக்கு வருவதால் மாத்திரம் நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படாது என்றார்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக்கொண்டார் என்பதற்காக மாயாஜால வித்தைகளை செய்து மனித உரிமைகள் செயற்பாடுகளில் அவரால் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் கூட பொலிஸ் வன்முறைகள் குறைந்திருந்த போதிலும் முற்றாக இல்லாமல்போகவில்லை. மனித உரிமைகள் தொடர்பான நிலவரங்கள் எனும்போது அது தனி மனிதரில் தங்கியிருப்பதில்லை. ஒட்டுமொத்த மக்களின் மனநிலையில் மாற்றங்கள் வர வேண்டம். குறிப்பாக பொறிமுறையில் மாற்றம் ஒன்றே நாட்டுக்கு அவசியம் எனவும் தெரிவித்தார்.

இம்மாதம் 9ஆம் திகதி அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. மாறாக அரசியல்வாதிகளின் வீடுகளைத் தாக்கியதாகவும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகவும் பலரை பொலிஸார் கைது செய்துவருகிறார்கள்.நியாயமான சந்தேகத்தின் அடிப்படையிலோ அல்லது ஆதாரத்தின் அடிப்படையிலோ இந்த கைதுகள் இடம்பெறவில்லை என்பதுபோலவே எமக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிப்பதாகவும் கூறினார்.

# ரணிலின் பின்னணியில்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடிய இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, நாட்டின் நிகழ்கால அரசியல் செயற்பாடுகள் குறித்தும், தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார். அதன்போதே இந்த விடயங்களை கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

“இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமாகவுள்ளது. ஓர் உறுதியான அரசாங்கம் அமையப் பெற வேண்டும். அப்போதுதான் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியும். ஓர் உறுதியான அரசாங்கம் அமையப்பெற வேண்டும் என்பதில் கரிசனை செலுத்தினோம்.அதேவேளை, பிரதமராக ரணில் அல்ல வேறு யார் வந்தாலும் நாம் தொடர்ந்து பணியாற்றியிருப்போம்“ என குறிப்பிட்டுள்ளார்.

# ரணிலுக்கு ஆதரவளிக்க...

தங்களது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை வலைத்துப்போடும் டீல் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டால், அரசாங்கத்துக்கு வழங்க தீர்மானித்துள்ள ஆதரவை திரும்பப் பெறுவோம் எனவும் எச்சரித்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று(16) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக தற்போதைய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நாட்டுக்கு சார்பான நல்ல விடயங்களுக்கு, அமைச்சுப் பதவிகள் எதனையும் பெறாது, பாராளுமன்ற செயற்பாடுகளின் ஊடாக ஆதரவை வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி பொறுப்பு வாய்ந்த அரசியற் கட்சி என்ற வகையில், நாடு முகங்கொடுத்துவரும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது தற்போது அத்தியாவசியமானதென கருதுவதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைகளுக்குப் புறம்பாக தமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை ஆளுங்கட்சியில் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இடைக்கால அரசாங்கத்துக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ள ஆதரவை திரும்பப்பெறுவோம் எனவும் அக்கட்சி நிபந்தனை விதித்துள்ளது.

# ரணிலுக்கு புதிதாக...

சம்பந்தன் தெரிவித்துள்ளார். தமிழர் அரசியல் பிரச்சினை என்னவென்பது பிரதமர் ரணிலுக்கு நன்றாகவே தெரியும் எனவும் அவர் கூறினார்.

தமிழர் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை வழங்குவதன் மூலமாகவே நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். இதனையே நாம் தொடர்ச்சியாக சகல அரசாங்கங்களுக்கும் தெரிவித்து வருகின்றோம். தமிழர் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண எந்தத்தரப்புடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தயாராகவே உள்ளோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் இந்த விடயங்களை நாம் பேசியுள்ளோம். கடந்த நல்லாட்சியில் அதிகளவில் அவருடன் நாம் இந்த விவகாரங்கள் குறித்து பேசி தமிழ் மக்களின் நிலைமையை எடுத்துக்கூறியுள்ளோம். தமிழ் மக்களின் வேதனைகள், பொருளாதார நெருக்கடி நிலைமைகள் குறித்தெல்லாம் ரணிலுக்கு புதிதாக விளங்கப்படுத்த அவசியம் இல்லை என்றே கருதுகின்றோம்.

இப்போதுள்ள நெருக்கடி நிலைமையில் அரசாங்கத்தின் ஆரோக்கியமான வேலைத்திட்டங்களை

# 3 மணி நேரம்...

இதேவேளை, எரிபொருள் நெருக்கடி காரணமாக மின் தடைகளை திருத்தும் பணிகள் தாமதமாகலாம் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சாரம் தடைபடும் இடங்களுக்குச் செல்வதற்கு சபைக்கு சொந்தமான வாகனங்களில் எரிபொருள் இல்லை எனவும் இதனால் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான வாகனங்களே இயங்குவதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

# 50,000 யூரோவுடன்...

கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 50,000 யூரோ பணத்துடன் பொரளையில் வசிக்கும் 53 வயதுடைய சந்தேக நபர், பணமோசடி குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதி சுமார் 18.69 மில்லியன் இலங்கை ரூபாயாகும் எனவும் மேலதிக விசாரணைகளுக்காக அவர் கிருலப்பனை சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். உண்டியல் முறையானது நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு, பொரலஸ்கமுவ பிரதேசத்தில் உண்டியல் முறையினூடாக 47,000 அமெரிக்க டொலர்களை பரிமாற்றம் செய்வதற்கு முயன்ற இரண்டு பேர் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால், சனிக்கிழமை (14) கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இன்று முதல்...

இதேவேளை, 2021 ஆம் சா/த பரீட்சையுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதற்கு இன்று (17) நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

சா/த பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் இதுவரை கிடைக்கவில்லையெனின், பரீட்சைகள் திணைக்களத்தின் www. doenets.lk எனும் இணையத்தளத்துக்குள் பிரவேசித்து பெற்றுக்கொள்ளமுடியும்

இணையத்தின் முதற்பக்கத்திலுள்ள எமது சேவைகள் எனும் நிரலின் கீழுள்ள க.பொ.த.சாதாரண தரம் 2021 அனுமதிப்பத்திர பதிவிறக்கம் பகுதியை தெரிவு செய்து, சரியான தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது பரீட்சை இலக்கத்தை குறிப்பிட்டு அனுமதிப்பத்திரத்தின் பிரதியை பதிவிறக்கம் செய்ய முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாராளுமன்றம் இன்று...

புதிய பிரதமராக எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய அமைச்சரவை அமைச்சர்கள் சிலரும் நியமிக்கப்பட்டுள்ளதால் ஆளுங்கட்சியின் பாராளுமன்ற ஆசனங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்தார்.

இதேவேளை பிரதி சபாநாயகர் தெரிவும் இன்று (16) இடம்பெற உள்ளதோடு, பிரதி சபாநாயகருக்காக ஆளுங்கட்சியின் சார்பில் அஜித் ராஜபக்ஷ எம்.பியின் பெயரும், எதிர்க்கட்சியின் சார்பில் பெண் பாராளுமன்ற உறுப்பினராக ரோஹினி கவிரத்னவின் பெயரும் முன்மொழியப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகரின் தெரிவுக்குப் பின்னர் ஜனாதிபதிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்தக்கொள்வதற்காக நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி வைப்பதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதாகவும் அறிய முடிகிறது.

# இடைக்கால பட்ஜெட்டை தயாரிக்கின்றார் ரணில்

இந்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் சுயாதீன அணியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிரான எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு செயற்பாடுகளை முழுமையாக மாற்றி ஜனாதிபதிக்கு ஆதரவான பெரும்பான்மையை பலப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சுயாதீன அணியினர் மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியினருடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட கலந்துரையாடல் ஒன்றினை நேற்று (16) முன்னெடுத்திருந்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையில் கட்சி அரசியல் செயற்பாடுகளை இப்போது முன்னெடுக்காது சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் சகல கட்சிகளின் உறுப்பினர்களும் ஒன்றிணைந்து அமைச்சரவையில் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு, ஆனால் அதற்கு பலர் இணக்கம் தெரிவிக்காத காரணத்தினால் தேசிய சபையை உருவாக்கி அதில் சகல கட்சிகளின் பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக்கொள்வதுடன், 15 பாராளுமன்ற செயற்குழுக்கள் நியமிக்கப்பட்டு அதிலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமைத்துவத்தை பெற்றுக்கொள்ளும் யோசனையை முன்வந்துள்ளார்.

அத்துடன் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை கையாள வேண்டியுள்ள காரணத்தினால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவுசெலவு திட்டத்தின் மூலமாக அதற்கான இலக்குகளை அடைந்துகொள்ள முடியாது என்பதை சுட்டிக்காட்டியுள்ள பிரதமர் விரைவில் இடைக்கால வரவுசெலவு திட்டமொன்றை முன்வைப்பதாகவும், அடுத்த ஆறுமாத காலத்துக்காக விசேட வேலைத்திட்டங்களை பாராளுமன்றத்தில் தான் முன்வைக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

21ஆம் திருத்த சட்டத்தை விரைவாக கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதற்காக இதுவரையில் சகல தரப்பினாலும் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை தான் கருத்தில் கொள்ளத் தயராக இருப்பதாகவும் சகல தரப்புடனும் இது குறித்து கலந்துரையாடி விரைவில் 21 ஆம் திருத்தத்தை சகல தரப்பின் ஆதரவுடனும் நிறைவேற்ற தாம் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் சட்டத்தரணிகள் சங்கத்துடன் பிரதமர் கலந்துரையாடியுள்ள நிலையில் விரைவில் 21 ஆம் திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

# அதிகபட்சம் 5 மணிநேர...

நாட்டில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட பின்னர் ஏழரை மணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் மேற் குறித்த சங்கத்தினால்

களனிதிஸ்ஸ மற்றும் யுகதனவி மின் உற்பத்தி நிலையங்களில் மட்டுமே டீசல் உள்ளதாகவும் வேறு எந்த அனல் மின் நிலையங்களிலும் எரிபொருள் இல்லை என்றும் சங்கம் சுட்டிக்காட்டியது.

களனிதிஸ்ஸ மின்நிலையத்தின் கையிருப்பில் உள்ள எரிபொருள் ஒரு நாளுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும், அதே வேளை யுகதனவி மின்நிலையத்தில் அதிகபட்சம் இரண்டு நாட்களுக்கு டீசல் கையிருப்பு காணப்படுவதாகவும் என்று தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.






# முள்ளிவாய்க்கால் கஞ்சி



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் ஐந்தாவது நாளான நேற்று (16) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி, நினைவு கூரப்பட்டு வருகின்றது.

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களின் நினைவாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உடையார் கட்டு பகுதியில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டு கஞ்சி காச்சி வழங்கப்பட்டது.

உடையார்கட்டு பொது சந்தை முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கஞ்சிவழங்கும் நிழக்வு நடைபெற்றுள்ளது.

இறுதிப்போரின் போது மக்களுக்கு கஞ்சிகாச்சி வழங்கிய தாயார் ஒருவர், இன்றையதினம் கஞ்சி காச்சி மக்களுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பகுதியிலும் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று (16) ஐந்தாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது

இதன்போது முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குகின்றசெயற்பாடுகளில்ஈடுபட்டுள்ளனர்

(சண்முகம் தவசீலன் செ.கீதாஞ்சன்)

ரணிலுக்கு ஆதரவளிப்பதா? இல்லையா?

# விரைவில் அறிவிப்போம்



## இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான்

■ பா.நிரோஸ்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதா, இல்லையா என்பது குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தீர்மானம் விரைவில் அறிவிக்கப்படும் அக்கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையில் பேச்சுவார்த்தைநடைபெற்றதை செந்தில் தொண்டமான் உறுதி செய்ததோடு, இதன்போது பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் தெரிவுக்கான வாக்கெடுப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்தப் பேச்சுவார்த்தையில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பிலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிலைபாடு தொடர்பிலும் விரைவில் தெரிவிக்கப்படும் என்றார்.

பாராளுமன்றத்தில் இன்று (17) நடைபெறவுள்ள பிரதி சபாநாயகர் தெரிவின்போது ஐக்கியமக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்னவுக்கு ஆதரவாக வாக்களிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மத்தியச் செயற்குழு தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி தெரிவித்தார்.

புலிகள் தாக்குதல் நடத்தப் போவதான செய்தி

# புனர்வாழ்வாளிக்கப்பட்ட போராளிகளை பாதித்துள்ளது

■ ஹஸ்பர், ஏ.எம்.கீத்



மே 18, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று, விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தவுள்ளனர் என்ற புரளி செய்தி, தமிழ் மக்களையும் புனர்வாழ்வாளிக்கப்பட்ட போராளிகளையும் பாதித்துள்ளதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலை புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்தார்.

உண்மைக்கு புறம்பான இந்தச் செய்தியை வன்மையாக கண்டிக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள ஊடக இல்லத்தில் நேற்று (16) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், "கோட்டா கோ ஹம போராட்ட பூமியை கலைக்க, மக்கள் மத்தியில் அச்சத்தை உண்டு பண்ணவே இந்த புரளியை ஏற்படுத்தியுள்ளனர்.

"இறுதி யுத்தத்தின் போது மஹிந்த அரசாங்கத்துக்கு இனப் படுகொலைக்கான சகலவிதமான ஆயுதங்களையும் கொடுத்தது உதவி புரிந்தது இந்திய அரசாங்கமே. இலங்கையில் ஆயுதக் குழுக்களை உருவாக்கவும் மீண்டும் தமிழர்கள் மீது வன்முறைகளை திணிப்பதற்காகவும் செயற்படும் இந்திய அரசின் சதித் திட்டமாக மாறியுள்ளது.

"யுத்தம் முடிவடைந்து 30 வருடங்களின் பின் சமூகத்துடன் புனர்வாழிக்கப்பட்டு இணைந்து வாழ்கின்ற நேரத்தில், பல துன்பங்களை அனுபவிக்கிறோம். வாழ்வதற்கான பொருளாதார நிலை கூட மோசமடைந்த நிலையில் உள்ளது. இவ்வாறாக இருக்கும் போது, மோதல்களை வன்முறையை தூண்டும் செயற்பாடு வேதனையளிக்கிறது.



ஏறாவூர் வன்முறைகள்;

# பிரதான சந்தேகநபருடன் 12 பேர் கைது

## பலருக்கு வலைவீச்சு

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு - ஏறாவூர் நகரில் கடந்த 10ஆம் திகதி இரவு வன்முறைகளில் ஈடுபட்ட பிரதான நபர் உட்பட 12 பேரை கைது செய்யப்பட்டுள்ளனர் என ஏறாவூர் பொலிஸா, நேற்று (16) தெரிவித்தனர்.

வன்முறைக் கும்பலில் சம்பந்தப்பட்ட மேலும் பலர் தேடப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான சந்தேக பர் தனது அணியைச் சேர்ந்த ஏனையோரையும் வன்முறையில் ஈடுபடுமாறு கூவி அழைப்பது காணொளிக் காட்சியில் இருப்பதாகவும் இதன் அடிப்படையிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூரில் வன்முறையில் ஈடுபட்ட கும்பல் மூன்று ஆடைத் தொழில்சாலைகளைச் சேதமாக்கியிருந்ததோடு, முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமட்டின் வாடகைக் கட்டடமான அவரது அலுவலகம் அவரது சகோதரரின் வீடு, சகோதரரின் புதல்வருக்குச் சொந்தமான உணவகம் ஆகியவற்றைத் தாக்கி தீயிட்டும் கொளுத்தியிருந்தனர்.

எவென்ட்ரா ஹோட்டல் மீதான தாக்குதல்

# 35 பேருக்கும் 19 வரை விளக்கமறியல்

■ எம்.இஸட். ஷாஜஹான்



நீர்கொழும்பு எவென்ட்ரா (Evendra Hotel) ஹோட்டலின் மீது தாக்குதல் நடத்தி அங்குள்ள சொத்துக்களுக்குச் சேதவிளைவித்ததுடன் சொத்துக்களை கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட 35 பேர் பேரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு பதில் நீதவான் நெல்சன் குமாரநாயக்க (16) உத்தரவிட்டார்

அவ்வாறு விளக்கமறியலில் வைக்கபட்டுள்ளவர்களில் மூவர் பெண்களாவர்.


கடந்த 9 ஆம் திகதியன்று நீர்கொழும்பு நகரிலும் பதற்றம் ஏற்பட்டது. இதன்போது அங்குள்ள அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானவர்களின் ஹோட்டல்கள் மற்றும் சொத்துக்கள் நாசப்படுத்தப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக கட்டானை பொலிஸார் மற்றும் நீர்கொழும்பு பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாருடன் இணைந்து நடத்திய தேடுதலில், 35 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

அனுமதியின்றி உட்பிரவேசித்தமை, சொத்துக்களுக்கு தீவைத்து சேதம் ஏற்படுத்தியமை, சொத்துக்களை திருடியமை, திருடிய சொத்துகளை கைவசம் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சந்தேக நபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

கார்ல்டன் தோட்டத்தின்

# நாய்க்குட்டியை வைத்திருந்த யுவதி கைது



வீரகெட்டிய, கார்ல்டன் தோட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது அங்கிருந்த நாய்க்குட்டி காணாமல் போயுள்ள நிலையில், பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது அந்த நாய்க்குட்டியை வைத்திருந்த யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது வீட்டின் முன் இருந்த நாய்க்குட்டியை வீட்டுக்கு கொண்டு வந்ததாக அந்த யுவதி கூறிய போதிலும் கார்ல்டன் தோட்ட பாதுகாப்பு அதிகாரிகள் யுவதியை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக தெரியவருகிறது.

கைது செய்யப்பட்டவர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வீரகெட்டிய பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் மகள் என தெரியவந்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தோட்டத்தின் மீது தாக்குதல் மேற்கொண்ட போது அந்த யுவதி அங்கிருந்த நாய்க்குட்டியை எடுத்து வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

வல்வெட்டித்துறை

# மண்ணை வணங்கி பேரணி ஆரம்பம்

■ எஸ்.தில்லைநாதன்



பிரபாகரனின் பிறந்த ஊரான வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள அவரது பிறந்த வீட்டுக்கு முன்னால் விழுந்து மண்ணை வணங்கிய பொதுமக்கள், முள்ளிவாய்க்கால் பேரணியை, நேற்று (16) ஆரம்பித்தனர்.

2009 மே 18 இல் முள்ளிவாய்க்காலில் மக்களை கொன்றொழித்த யுத்தத்தின் கறைபடிந்த நாளான முள்ளிவாய்க்கால் நினைவு வாரம், கடந்த 12ஆம் திகதி தமிழர் தாயகப் பகுதிகளில் உணர்வுபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிலையில், வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த ஊரான வல்வெட்டித்துறையில் இருந்து நேற்று ஆரம்பிக்கப்பட்ட பேரணி, நடைபவனியாக பருத்தித்துறை நெல்லியடி, அச்சுவேலி, நல்லூர் கந்தசாமி கோவில், யாழ். பல்கலைக்கழகம் ஊடாக யாழ். நகரத்தை வந்தடையவுள்ளது.

பின்னர் யாழ். நகரத்திலிருந்து நாவற்குழி, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஊடாக கிளிநொச்சியை சென்றடைந்து, அங்கிருந்து நாளை 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை சென்றடையவுள்ளது.

எரிபொருள் விநியோக பொறிமுறை

# வழமைக்குத் திரும்ப 4–5 நாட்கள் செல்லும்

தற்போது நாடு முழுவதிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் பௌசர்கள் அனுப்பி வைக்கப்படுவதாக தெரிவித்த இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள், எரிபொருள் விநியோக பொறிமுறை வழமைக்குத் திரும்ப நான்கு அல்லது ஐந்து நாட்களாகும் எனவும் தெரிவித்துள்ளனர்.

வெசாக் பூரணை காரணமாக நேற்றுமுன்தினம் (15) நிறுத்தப்பட்டிருந்த எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் நேற்று முதல் (16) ஆரம்பிக்கப்பட்டதாக இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சியசாலை கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எனினும், எரிபொருள் நெருக்கடி காரணமாக நாடளாவிய ரீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் நீண்ட வரிசையில் நேற்றும் காணப்பட்டது. சில பகுதிகளில் 2 கிலோ மீற்றர் தூரம் வரை வரிசை நீண்டதால் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

டீசல் பற்றாக்குறையால்

# 80 சதவீத பஸ்கள் இயங்கவில்லை

## ஊரடங்கினால் இரவு ரயில்களும் இரத்து

டீசல் பற்றாக்குறை காரணமாக பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் 80 சதவீதமான தனியார் பஸ்கள் சேவைகளை நிறுத்தியுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித், நேற்று (16) தெரிவித்தார்.

ஒட்டோ டீசல் பற்றாக்குறையால் கடந்த சில நாட்களாக சுப்பர் டீசலில் பஸ்கள் இயக்கப்பட்டதாகவும் எனினும் பஸ்களை தொடர்ந்து இயக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் குறிப்பிட்டதுடன், சுமார் 20 சதவீத பஸ்கள் மாத்திரமே இயக்கப்படுகின்றன என்றார்.

இதேவேளை, மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணத்தினால் நேற்று (16) இரவு 8 மணிக்கு முன்னர் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் ரயில்கள் மாத்திரமே இயங்கும் என்று ரயில்வே பிரதிப் பொது முகாமையாளர் (போக்குவரத்து) காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால் ரயில்களை இயக்க முடியாது என்றும் அஞ்சல் ரயிலும் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க

# அர்ப்பணிப்புடன் பணியாற்றவும்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க நாட்டின் தலைவர்கள் பணியாற்ற வேண்டுமென மட்டக்களப்பு, அம்பாறை மறை மாவட்ட ஆயர் அருட் கலாநிதி ஜோசப் பொன்னையா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, பெரிய புல்லுமலை புதுமைமிகு புனித செபமாலை அன்னை திருத்தல வைகாசித் திருவிழா, நேற்று முன்தினம் (15) கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்துரைத்த ஆயர், "இக்கட்டான இந்தக் காலகட்டத்திலும் இந்தத் திருப்பலியில் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

"நாட்டு மக்களை, அரச தலைவர்கள் பாதுகாக்க வேண்டும். நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை மீட்கவும் அரச தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

"இந்தக் கால கட்டத்தில் சிந்தித்து செயற்பட வேண்டும். மக்கள் கஷ்டத்தில் வாடுகின்றார்கள். அன்றாட வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதற்கு அவர்கள் சிரமப்படுகின்றார்கள்.

"பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தாலும் மக்களின் வாழ்வாதாரம் பின்தங்குகின்றது. இந்தக் கால கட்டத்தில், தலைவர்கள் பொறுப்புடன் செயற்பட்டு, மக்களை கஷ்டத்திலிருந்து பாதுகாக்க வேண்டும்" என்றார்.



## விசித்திரத் திருட்டு

தீஷான் அஹமட்

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் பிரதேசத்தில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்று, அதன் இரு டயர்களையும் கலட்டி எடுத்துச் சென்றுள்ளனர்.

அத்தோடு, மோட்டார் சைக்கிளை குளத்தை அண்டிய பகுதியில் திருடர்கள் கை விட்டுச் சென்றுள்ளனர்.

மூதூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அரச ஊழியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளையே, நேற்று முன்தினம் (15) இரவு இவ்வாறு திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படாத நிலையில், மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தோப்பூர் பிரதேசத்தில் சில மாதங்களுக்கு முன்பு மோட்டார் சைக்கிள் ஒன்றின் பெற்றோல் தாங்கி மாத்திரம் திருடிச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



## திருகோணமலையில் அதிகமானோர் கைது

எப்.முபாரக்

திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 10க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்திலேயே நேற்று முன்தினம் (15) இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அதுக்கோரளவின் வீடுகள் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸாரால் வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டு, சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கைதானவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சமூக செயற்பாட்டாளரும் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளருமான ரொஷான் அக்மீமன,

"திருகோணமலையில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான அமைதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களே மேற்படி கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறான கைதுகள், அரசின் சர்வாதிகாரத்தை வெளிக் காட்டுகின்றன" என்றார்.

இதேவேளை, திருகோணமலை நகரின் சமூக செயற்பாட்டாளர் ஒருவரை உப்புவெளி பொலிஸ் நிலையத்துக்கு வாக்குமூலம் பெறுவதற்காக பொலிஸாரால் நேற்று (16) அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கல்முனையில்

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



சகா

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஏற்பாட்டில், கல்முனையில் நேற்று (16) காலை 10:30 மணிக்கு நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே. கோடீஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீ.சிறிநேசன், பா.அரியநேத்திரன், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி.சரவணபவான், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது, முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

இனவழிப்புக்கு நீதி கோரி

## திருமலைக்கு நகரும் பேரணி

வாகிருஸ்ணா, வசந்தி

முள்ளிவாய்க்காலின் 13ஆவது ஆண்டு நினைவேந்தல்களுக்கு அமைவாக பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையில் முன்னெடுக்கப்படும் பேரணி, மட்டக்களப்பிலிருந்து நேற்று (16) ஆரம்பமானது.

"இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்புக்கு நீதியைப் பெற்றுக்கொடு" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் இந்தப் பேரணி, மட்டக்களப்பை நேற்று முன்தினம் மாலை வந்தடைந்தது.

கல்லடி பாலத்துக்கு அருகில் முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் வேதனைகளை வெளிப்படுத்தும் நிகழ்வுகளில் ஒன்றாக கருதப்படும் உப்பற்ற கஞ்சி வழங்கப்பட்டு, திருகோணமலை நோக்கி பேரணியானது, பயணமானது.

வட, கிழக்கு மாகாண வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோர் அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் இந்தப் பேரணியில் மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் தி.சரவணபவன், முன்னாள் எம்.பிக்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்கள், உட்பட பல பிரதிநிதிகள் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இப் பேரணி, திருகோணமலையிலிருந்து இன்று (17) முல்லைதீவுச் சென்று நாளை (18) முள்ளிவாய்க்கால் சென்றடைவதுடன், அங்கு இனவழிப்பு வார நிகழ்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## முருகன் கோவிலில் நினைவேந்தல்

க.விஜயரெத்தினம்

மட்டக்களப்பில் வழமைபோல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, கல்லடி பிரதான வீதியிலுள்ள ஶ்ரீ முருகன் கோவிலில் நாளை (18) காலை 9 மணிக்கு இடம்பெறுமென மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு விளக்கேற்றல், அக வணக்கம், விசேட பூசை வழிபாடுகள் மற்றும் கஞ்சி வழங்குதல் போன்ற நிகழ்வுகள் இதன்போது இடம்பெறவுள்ளன.

முள்ளிவாய்க்காலில் 13 வருடங்களுக்கு முன்பு இனப்படு கொலை செய்யப்பட்ட எமது உடன் பிறப்புக்களை நினைவு கூர்வது எமது உரிமையாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

"2019ஆம் ஆண்டு முதலாவது முள்ளிவாய்க்கால் நினைவேந்தனை பல அச்சுறுத்தல் மத்தியில் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே கொக்கட்டிச்சோலை ஶ்ரீ தான்தோன்றீஷ்வரர் கோவிலிலும், மட்டக்களப்பு மாமாங்கேஷ்வரர் கோவிலிலும் நடத்தினோம்.

"2010 தொடக்கம் தொடர்ந்து மட்டக்களப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

"இவ்வாண்டு நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை எதுவும் இல்லை; போரில் இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நினைவேந்த உறவுகளுக்கு உரிமையுண்டு எனவும் அதனை யாரும் தடுக்க முடியாது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்" எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சூறையாடப்பட்ட தமிழர்களின் சொத்துகளுக்கு

# நிவாரணங்கள் வழங்கப்பட்டதா?

### தமிழர் மீது அரசாங்கத்துக்கு அக்கறை இல்லை

வி.நிதர்ஷன்





காலிமுகத்திடலில் அமைதி வழியில் போராடிக்கொண்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திய குண்டர் கூட்டத்துக்கு எதிராக போராட்டக்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட பதில் தாக்குதல் தொடர்பான மதிப்பீடுகளையும் நிவாரணங்களையும் அரசாங்கம் உடனடியாக அறிவித்துள்ளது.

இநிலையில், இதுகாலம்வரை தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு உரிய மதிப்பீடுகளோ, விசாரணைகளோ, நிவாரணங்களோ வழங்கப்பட்டதா என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"நாட்டில் 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரச கரும மொழி சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது அதனைத் தமிழர்கள் எதிர்த்தனர். இதற்கு எதிர்வினையாக தமிழ் மக்களின் கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகள் அழிக்கப்பட்டன. அத்துடன், நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஆனால், இன்றுவரை இது தொடர்பான விசாரணைகளும் நடைபெறவில்லை, நிவாரணமும் கிடைக்கவில்லை.

"1977ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன தமிழ் மக்கள் மீது வன்முறையை ஏவிவிட்டார். இதன்போதும் தமிழர் சொத்துகள் அழிக்கப்பட்டதுடன், ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

"மீண்டும் 1983ஆம் ஆண்டும் தமிழர்கள் மீது அரச அனுசரணையுடன் பாரிய ஒரு வன்முறைத் தாக்குதல் கட்டவிழ்த்துவிடப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன், திட்டமிட்ட வகையில் அவர்களது வீடுகளும், வியாபார நிறுவனங்களும் கொள்ளையிடப்பட்டு, தீயூட்டப்பட்டன.

"இந்த வன்முறைகளிலிருந்து தமிழர்கள் தம்மைத் தற்காத்துக்கொள்ள தனி நாடு கோரி இலங்கைப் படையினருக்கு எதிராக நீண்ட ஆயுதப்போராட்டத்தை நடத்தினர். அன்றைய காலகட்டங்களில் வடக்கு மற்றும் கிழக்கில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு, அவர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டன.

"இறுதியில், 2009இல் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதுடன், முள்ளிவாய்க்காலில் விவசாயிகளின் நூற்றுக்கணக்கான உழவு இயந்திரங்கள், கனரக வாகனங்கள், இயந்திரங்கள், கார்கள், லொறிகள், சைக்கிள்கள் என்பன கைவிடப்பட்டு, மக்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் மீண்டு வந்தபொழுது அவர்களுக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் உடமைகள் எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

"அத்தோடு, வடக்கு, கிழக்கில் யுத்தத்தின் பின்னர் வங்கிகளில் வைப்பிலடப்பட்டிருந்த பல்லாயிரம் கோடிய் பெறுமதியான தங்கமும், வைப்பிலிடப்பட்டிருந்த பல்லாயிரம் கோடிய் பணமும் அரசாங்கத்தால் கபளீகரம் செய்யப்பட்டன. இவை தொடர்பாக அன்றிலிருந்து இன்றுவரை விசாரணைகளோ, நிவாரணங்களோ எமது மக்களுக்குக் கிடைக்கவில்லை.

"ஆனால், அரசாங்கத்துக்கு எதிரான கலவரத்தின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்காக அரசாங்கத்தின் பல்வேறுபட்ட புலனாய்வுப் பிரிவுகளும் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றன. அதுமாத்திரமல்லாமல், பொதுமக்களிடமிருந்தும் இதுதொடர்பான தகவல்களைத் தருமாறு கோரி வருகின்றனர்.

"ஒரு நாளில் நடைபெற்ற இந்தக் கலவரத்தில் ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகள் அழிக்கப்பட்டதாக அரசாங்கம் தகவர் வெளியிட்டிருக்கிறது.

"இதில் சொத்துகளை இழந்த பலர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் என்ற வகையிலும் அவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் துரிதகதியிலான ஏற்பாடுகளைச் செய்ய முன்வந்திருக்கிறது.

"மேற்கண்டவற்றிலிருந்து இலங்கை அரசாங்கம் சிங்கள மக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் நலன்களில் காட்டுகின்ற அக்கறையை தமிழ் மக்கள் மீது காட்டுவதில்லை என்பது தெளிவாகின்றது.

"இவ்வளவு அழிவுகளுக்குப் பின்னரும், நாடு இன்று எதிர்நோக்கியிருக்கின்ற பொருளாதார வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் தமிழர்விரோத செயற்பாடே காரணம் என்று தெரிந்த பின்னரும், இலங்கை அரசாங்கம் இன்னமும் தமிழர் விரோத செயற்பாட்டையே உயர்த்திப் பிடிக்கின்றது என்பதும் தெளிவாகின்றன" எனக் குறிப்பிட்டுள்ளார்.







## தையல் பயிற்சி நிறைவு

கிளிநொச்சி கருணா நிலையத்தில் ஆறு மாத கால இலவச தையல் பயிற்சியை நிறைவு செய்த 11ஆவது பிரிவு மாணவர்களுக்கு, நேற்று (16) சான்றிதழ் வழங்கப்பட்டன.

அத்தோடு, அவர்களால் வடிவமைக்கப்பட்ட ஆடைகளும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.


கிளிநொச்சியில் கல்விப் பணி, சமயப் பணிகளை கடந்து பல்வேறு சமூகப் பணிகளையும் கருணா நிலையம் ஆற்றிவருகின்றது. அந்த வகையில், தொழிற் பயிற்சியாக தையல் பயிற்சியையும் வயது வேறுபாடின்றி அனைவருக்கும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

செ.கீதாஞ்சன்

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களின் நினைவாக முல்லைத்தீவு  புதுக்குடியிருப்பு, உடையார்கட்டுப் பகுதியில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டு, நேற்று (16) கஞ்சி காச்சி வழங்கிவைக்கப்பட்டது.

உடையார் கட்டு பொது சந்தை முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில், இந்தக் கஞ்சி வழங்கும் நிழக்வு நடைபெற்றது.



இறுதிப் போரின் போது மக்களுக்கு கஞ்சி காச்சி வழங்கிய தாயார் ஒருவர் இதன்போது கஞ்சி காச்சி மக்களுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலையில்

## குமுதினி படுகொலை நினைவேந்தல்

எம்.றொசாந்த்

குமுதினி படுகொலையின் 37ஆவது நினைவேந்தல், யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கு முன்றலில், நேற்று முன்தினம் (15) ஆத்மார்த்தமான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

1985ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையே பயணம் செய்த 64 பயணிகளை உள்ளடக்கிய குமுதினிப் படகு வழிமறிக்கப்பட்டு, கடற்படையினரால் குறித்த படகில் பயணித்த குழந்தை உட்பட 36 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு உரிய நீதி இன்னும் கிடைக்கப்பெறவில்லை அவர்களுக்குரிய நீதி கிடைக்க வேண்டும் என யாழ். பல்கலைகழக மாணவர்களால் இதன்போது வலியுறுத்தப்பட்டது.







## நீர்த்தேக்கங்களின்

# கழிவுகள் தேக்கம்

■ செ.தி.பெருமாள்

நீரேந்தும் பிரதேசங்களில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடை மழையால், மவுசாக்கல நீர்த் தேக்கத்தின் நீர் வரத்துகளில் அதிகளவில் கழிவுகள் தேக்கமடைந்துள்ளன.

பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளிட்ட உக்காப் பொருள்களே இவ்வாறு மழையில் அடித்து வரப்பட்டு தேங்கிக் கிடக்கின்றன.

குறிப்பாக சாமிமலை, நல்லத்தண்ணி, மறே, காட்மோர் ஆகிய பகுதிகளிலுள்ள ஆறுகளிலிருந்தே குறித்த கழிவுகள் காவி வரப்பட்டு, நீர்த்தேக்கத்தில் தேங்கியுள்ளன.

# மஸ்கெலியாவில் நடமாடும் சேவை

■ செ.தி. பெருமாள்



இந்த மாதமும் அடுத்த மாதமும் மஸ்கெலியா பிரதேசச பைக்குட்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளுக்கும் நடமாடும் சேவை நடைபெற வுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அம்பகமுவ பிரதேச செயலகம் கடிதம் மூலம் உறுதிபடுத்தியுள்ளது.

இந்த நடமாடும் சேவையை மஸ்கெலியா பிரதேச சபை மற்றும் அம்பகமுவ பிரதேச செயலகம் என்பன இணைந்து நடத்தவுள்ளனர்.

மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோக், மஸ்கெலியா தொகுதி மக்களுக்கு நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் இங்கு காணப்படுகின்ற அனைத்துக் கிராம சேவகர் பிரிவுக்கும் தனித் தனியே இது முன்னெடுக்கப்பட வேண்டும் என பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

இந்தப் பிரேரணைக்கு சபையின் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்து நிறைவேற்றியதுடன், மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்துக்கும் அனுப்பிவைத்தனர்.

இதற்கமையவே, இந்த நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

## தடைப்பட்டிருந்த போக்குவரத்து

# வழமைக்கு திரும்பியது

■ இரா.யோகேசன்

தியகலை - நோட்டன் வீதியின் டெப்லோ என்ற இடத்தில் நேற்று முன்தினம் (15) கற்பாறையொன்று வீதியின் குறுக்கே விழுந்தமையால் தடைப்பட்டிருந்த குறித்த வீதியுடனான போக்குவரத்து தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது.

மலையகத்தில் நிலவும் சீரற்ற வானிலையால் ஆங்காங்கே மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில், தியகலை-நோட்டன் வீதியின் டெப்லோ பகுதியில், வீதியின் குறுக்கே கற்பாறை சரிந்து விழுந்ததால் அப்பகுதிக்கான போக்குவரத்து நேற்று முன்தினம் தடைப்பட்டிருந்தது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களால் வீதியின் பணிகள் சீரமைக்கப்பட்டு, போக்குவரத்து நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும், இதன்போது மின்சார கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதம் நேற்று வரை சீர் செய்யப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

# ‘செத்த பாம்புடன் பேச்சு எதற்கு?’

■ ஆ.ரமேஸ்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து வெளியேறி, பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிலைப்பாடு தொடர்பில் எவ்விதமான தகவல்களும் கசியவில்லை.

புதிய பிரதமர் ரணில் விக்கரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது குறித்தும் உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை. எனினும், புதிய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்கெனவே, தீர்மானித்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்வீட்டு தகவல்களின் பிரகாரம், கடந்த ஏப்ரல் மாதமே தீர்மானித்துவிட்டதாக அறியமுடிகின்றது. அதனடிப் படையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி கிடைக்கவுள்ளதாக அறியமுடிகின்றது. எனினும், அந்தத் தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த நால்வருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவிருப்பதாக அறியமுடிந்தது. அதிலோர் அமைச்சுப் பதவி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு கிடைக்குமென முன்னதாக தகவல்கள் கசிந்திருந்தன.



பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும், முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில், நேற்று (16) சந்திப்பொன்று இடம்பெறவிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த செய்தியை உறுதிப்படுத்துவதற்காக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானுடன் தொடர்புகொண்டு வினவியபோது, “ செத்த பாம்புடன் பேச்சு எதற்கு” என எம்மிடமே வினவினார்.







# மரவள்ளிக் கிழங்கு தானம்



வெசாக் பௌர்ணமி தினமான நேற்று (16) ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டிலும் மொனராகலை பிரதேச சபையினராலும் மரவள்ளிக் கிழங்கு தானம் வழங்கப்பட்டது.
(படங்கள் –ரஞ்சித் ராஜபக்ஷ, சுமணசிறி குணதிலக)

## நாவலப்பிட்டியில்

# இளைஞர்களால் ஆர்ப்பாட்டம்



■ ரஞ்சித் ராஜபக்ஷ

நாட்டை இளைஞர்களுக்கு மீதப்படுத்துமாறு தெரிவித்து, நாவலப்பிட்டி பிரதேசத்தில் நேற்று (16) ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சமூக வலைத்தளங்கள் ஊடாக ஒருங்கமைக்கப்பட்டு இந்த இளைஞர், யுவதிகள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

அதிகளவான இளைஞர், யுவதிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றதுடன், அனைவரும் கருப்பு நிற ஆடைகளை அணிந்திருந்தனர்.

இதில் தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் இளைஞர், யுவதிகள் பங்கேற்றிருந்ததுடன், எதிர்கால இளைஞர்களுக்காக நாட்டை மீதப்படுத்துமாறு வலியுறுத்தினர்.






# கற்பாறைகள் வீதிகளில் சரிகிறது

## புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தம்

■ துவாரகஷான்

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக காற்றுடன் கூடிய மழை பெய்துவரும் நிலையில், மண்சரிவுகள், கற்பாறைகள் சரிவுகள் என்பன ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன.

லிந்துலை- நாகசேனே பிரதான வீதியை புனரமைக்கும் பணிகள் முன்னெடுத்த போதிலும், கடந்த ஆறு மாத காலமாக இப்பணி நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், புனரமைப்பு பணிகள் பாதியில் கைவிடப்பட்டுள்ள இடங்களில் பாரிய கற்பாறைகள் சரிந்து விழுந்துள்ளதுடன், மேலும் கற் பாறைகள் சரிந்து விழக்கூடிய அபாய நிலை காணப்படுகிறது.

இதனால் பாதையைப் பயன்படுத்தும் சாரதிகள் மற்றும் பொதுமக்கள் அச்சத்துடன் அப்பாதையை கடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு லிந்துலை போக்குவரத்து பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# புதிய அரசாங்கத்தில் இணைய வேண்டாம்

■ நிலமேகம் பிரசாந்த்

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தோடு இணையுமாறு பல அரசியல் கட்சிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ள நிலையில், புதிய அரசாங்கத்தில் இணைய வேண்டாம் என மலையக மக்கள் முன்னணி நிதிச் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியையும் புதிய அரசாங்கத்துடன் இணையுமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ள நிலையில், இவ்வரசாங்கத்தோடு இணையலாமா அல்லது வேண்டாமா என்பது தொடர்பிலான தீர்மானத்தை எடுப்பதற்கான மத்திய குழு கூட்டம், கட்சியின் தலைவர் வே.ராதாகிருஸ்ணன் தலைமையில் மலையக மக்கள் முன்னணியின் ஹட்டன் தலைமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் (15) நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய நிதிச் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன், “இந்த அரசாங்கத்தோடு ஒருபோதும் இணையக்கூடாது. காரணம் ஒட்டுமொத்த இலங்கை மக்களால் ஒதுக்கியெறியப்பட்ட அரசாங்கம் இது. மஹிந்த பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தாலும் ஜனாதிபதி இன்னும் விலகவில்லை.

“ராஜபக்ஷ குடும்பத்தை இலங்கை அரசியலில் இருந்து வெளியேறுமாறு நாட்டில் இன்னும் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள வரும் வரை இப்போராட்டம் தொடராலாம்.

“இச்சூழ்நிலையில் நாம் அரசாங்கத்தோடு இணைந்து செல்வது ஏற்புடையதல்ல. எனவே, இந்த அரசாங்கத்தோடு இணைய கூடாது” என அவர் தெரிவித்தார்.

## சிவனொளிபாத மலை

# பருவ காலம் இன்றுடன் நிறைவு

■ செ.தி பெருமாள், ரஞ்சித் ராஜபக்ஷ

2021 மற்றும் 2022ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாத மலை பருவகாலம், இன்று (17) நள்ளிரவுடன் நிறைவுக்கு வருவதாக பெல்மடுல்ல ரஜமஹா விஹாரையின் விகாராதிபதி பென்கமவ தம்மதின்ன தேரர் தெரிவித்தார்.

சிவனொளிபாத மலை பருவகாலம் நிறைவடைவது தொடர்பில் அரசாங்க அதிகாரிகளை தெளிவுப்படுத்தும் கூட்டம், நல்லதண்ணி பௌத்த மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

நேற்று (16) நள்ளிரவு வரை யாத்திரிகளுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டதுடன், இன்று (17) பகல் சிவனொளிபாதமலையில் நடைபெறும் விசேட சமய நிகழ்வுகளின் பின்னர், நித்திய பேழை மற்றும் புனித பொருள்கள் ஊர்வலமாக இரத்தினபுரி கல்பொத்த விஹாரைக்கு இராணுவத்தினரின் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்படும்.

இந்த பருவகாலத்தில் பல இலட்சம் யாத்திரிகர்கள் சிவனொளிபாத மலை தரிசனத்துக்கு சென்ற நிலையில், ஏனைய வருடங்களை விட இம்முறை யாத்திரிகர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.



# ஆதரவுக் கரங்களை தவறியேனும் கடித்துவிடக்கூடாது

பிரதமராகப் பதவி வகித்த மஹிந்த ராஜபக்‌ஷ, பிரதமர் பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து, நாட்டுக்குள் அரசியல் நெருக்கடி நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. ஏற்கெனவே, பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த நிலையில், ஸ்திரமான அரசாங்கமொன்று இல்லாமை, பெரும் சிக்கலை உருவாக்கியிருந்தது.

இந்நிலையில், சர்வகட்சிகள் அடங்கிய இடைக்கால அரசாங்கமொன்றை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ அழைப்பு விடுத்திருந்தார். பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட கட்சிகள், நிபந்தனைகளை விதித்து பேரம் பேசின. நாட்கள் கடந்துகொண்டே செல்கையில், பாராளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனத்தை மட்டுமே கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

தற்றுணிவுடன் பிரதமர் பதவியை ஏற்றக்கொண்ட ரணில், இரு பக்கங்களிலும் தனக்கு பெரும்பான்மை இருக்கிறது எனவும் பாராளுமன்றத்திலும் அதனை நிரூபிப்பேன் எனவும் உறுதிப்படக் கூறினார். அவரது ஆருடத்தை மெய்ப்பிக்கும் வகையில், கட்சிகள் பல ஆதரவுக் கரங்களை நீட்டியுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, கடந்த அரசாங்கத்திலிருந்து விலகி, சுயாதீனமாக செயற்பட்ட விமல், கம்மன்பில, வாசுதேவ உள்ளடங்கிய “குழு-10”, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன.

எனினும், அந்த அரசாங்கத்தில் எவ்விதமான அமைச்சுப் பதவிகளையும் பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டோம். ஏதாவது பேரம் பேசல்கள் இடம்பெறுமாயின் ஆதரவை விலகிக்கொள்வோமென எச்சரித்துள்ளன. ஜே.வி.பியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மௌனம் காத்துநிற்கின்றன.

இது மே மாதம், முள்ளிவாய்க்கால் வாரமும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. முன்பெல்லாம் மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், இறுதிநாள் உரையாற்றுவார். தென்னிலங்கை அரசாங்கம் மட்டுமன்றி சர்வதேசமே அவரது உரையை கூர்ந்து அவதானிக்கும். அப்போதான், “ரணி ஒரு நரி” என்றார் பிரபாகரன்.

தென்னிலங்கையிலும், தற்போது அவ்வாறே பலரும் சொல்கின்றனர். அரசியல் இராஜதந்திரம் என்பதற்கு அப்பாற் சென்று, டீல் அரசியல்வாதி, தந்திரமான நரி என்றெல்லாம் அழைக்கின்றனர். அதிலொரு நியாயம் இருக்கத்தான் செய்கின்றது. தனியொருவராக நின்றிருந்து, பிரதமர் பதவியை பெற்றுக்கொண்டிருக்கின்றார் என்றால், அரசியல் தந்திரம் கட்டாயமாகத் தேவை.

முள்கிரீடத்தை தலையில் ஏந்தியிருக்கும் பிரதமர் ரணிலுக்கு முன்பாகவுள்ள சவால்கள் கொஞ்சம் நஞ்சமல்ல, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் தோல்வி கண்டாரெனில், கடுமையாகத் தூற்றப்படுவார். கட்சியும் வேரறுந்து போய்விடும். விழுந்து கிடக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிவிட்டால் தூற்றுவோரும் போற்றுவர்.

இவற்றுக்கெல்லாம், ஆதரவுக் கரங்களை நீட்டியிருப்போரை ஆதரித்துச் செல்லவேண்டும். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் கையைக் கடித்துவிட்டால், தந்திரமெல்லாம் தப்பாகிவிடுமென ஞாபகமூட்டுகிறோம்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

அழிவு சிருஷ்டியின் ஆரம்பம். அழிவு நடப்பதை எந்த ஆத்மாவும் விரும்ப மாட்டாது. ஆனால், இவை நடைபெற்றேயாக வேண்டும்.

புதிய உயிரினங்கள் புவனிக்குத் தேவைப்படுகின்றன. பழையதைக் கழைவது அல்ல. ஆனால், இவை மறைந்து போகாது விடின், புதுமையின் விஸ்பரூபங்களை பூமியால் காண முடியாது போய்விடும்.

கால மாற்றங்கள் எல்லாமே நல்லதும் அல்ல. இயற்கை தொலைவதை யார் தான் விரும்புவார்கள்? ஒன்று அகலும் போது பல உருவங்கள் உயிர்த்தெழுந்தேயாக வேண்டும்.

கால மாற்றங்களை பழுதடையச் செய்வதும் இந்த மாந்தர்கள்தான். செய்யும் வினை மீளச் சூழும். ஆனால், எதனையும் சரிவரச் செய்யத்தயாராக இல்லை. எனவே, புதிய பூப்பதனால் அறிவு மேலோங்க நல்ல அனுபவம் மனிதர்களுக்கு ஏற்படலாம். ஏற்றுக்கொள்ள வேண்டிய தவறைஏற்பீர்களாக! மீண்டும் அதனைச் செய்யற்க!.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

ரணில் பிரதமரானதால்;

# மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

மொஹமட் பாதுஷா

ஒருபுறம் ஆட்சி மாற்றம் வேண்டுமென்று மக்கள் போராடிக் கொண்டிருக்க, மறுபுறம் பிரதமர் பதவிக்காக பலரும் கனவு கண்டுகொண்டிருக்க, இந்தக் கதைக்குள் சத்தமில்லாமல் திடீரென நுழைந்த ரணில் விக்கிரமசிங்க மிகச் சூட்சுமமான முறையில் பிரதமராகியுள்ளார்.

ஜனாதிபதியும் ஏனைய ராஜபக்‌ஷர்களும் ஒப்பீட்டளவில் தமக்கு பாதுகாப்பான ஒருவரை பிரதமராக நியமித்ததன் மூலம் ஆறுதலடைந்துள்ளனர். ஆனால், மக்களது எதிர்பார்ப்புக்கள், இறுதி இலக்குகள் நிறைவேறி, நிரந்தர ஆறுதல் கிடைக்குமா என்பதில் சந்தேகங்கள் இப்போதே மேலெழத் தொடங்கிவிட்டன.

கோட்டாபாய உள்ளிட்ட அனைத்து ராஜபக்‌ஷர்களையும் பதவி விலகுமாறு கோரி மக்கள் முன்னெடுத்த போராட்டங்கள் மிக வெற்றிகரமான முறையில் வேறு ஒரு மையப் புள்ளியை நோக்கி திசை திருப்பப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பதவி விலகாதிருக்க, பிரதமர் மாறினால், பசிலும் சமலும் நாமலும் பதவி துறந்தால் போதுமானது என்ற தோற்றப்பாடு கட்டமைக்கப்பட்டுள்ளது.

எல்லா தவறான தீர்மானங்களுக்கும் காரணகர்த்தா என ஜனாதிபதி கருதப்படுகின்றார். அதானாலேயே ‘கோட்டா கோ கம’ என்ற கோசம் உதயமானது. ஆனால், ‘நான் விலகமாட்டேன்’ என்று சொல்லிக் கொண்டு கோட்டா இன்னும் பதவியில் இருக்கின்றார்.

மக்கள் எதிர்ப்பலை பிரதமராகவிருந்த மஹிந்த மீது திருப்பி விடப்பட்டதால், அவர் பதவியிழந்து செல்ல வேண்டியேற்பட்டது, மக்கள் தரப்பிலிருந்து மஹிந்த மீது ஒப்பீட்டளவில் பெரிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிராத போதும், அவர் கடைசித் தருணத்தில் பலிக்கடாவாக்கப்பட்டுள்ளார்.

மிக நாகரிகமான முறையில் நடைபெற்ற மக்கள் எழுச்சிப் போராட்டங்களை குழப்புவதற்கு கொழும்புக்கு காடையர்களை அழைத்து வந்ததன் மூலம் பொதுஜனப் பெரமுன தரப்பு, தங்களது ஜனநாயக விரோதப் போக்கினை மட்டும் வெளிப்படுத்தவில்லை. மாறாக, மக்கள் போராட்டங்கள் தொடர்பில் அவர்களுக்கு இருந்த அறிவிலித்தனத்தையும் வெளிச்சம்போட்டு காட்டியது.

ஏற்கெனவே, மஹிந்த ராஜபக்‌ஷ பதவி விலக எத்தனித்தார். யுத்தத்தை வென்ற ‘ஹீரோ’ பட்டம் ‘சீரோ’ ஆகிப்போவதற்கு இடையில் விட்டு விலகிச் செல்வோம் என்று அவர் நினைத்திருப்பார். இருப்பினும் மக்கள் எதிர்ப்புக்கு பயந்து அதைச் செய்ய அவர் விரும்பவில்லை.

‘கோட்டாவைத்தானே போகச் சொல்கின்றார்கள் நாம் ஏன் விலக வேண்டும்’ என்றும் அவர் நினைத்திருக்கலாம். ஆனால், கீழே இருந்தவர்கள் அவர் பதவி விலக விடவில்லை. இவர் போனால் நாம் மாட்டிக் கொள்வோம் என்று கூட்டுக் களவாணிகளும் சிறிய கள்வர்களும் நினைத்திருப்பார்கள் என்று அனுமானிக்க முடிகின்றது. எப்படியோ வெள்ளம் தலைக்கு மேலால் போய்விட்டதால், மஹிந்த வேறு வழியின்றி ராஜினாமாச் செய்தார்.

இதன்மூலம் அவர் மூன்று விடயங்களைச் செய்தார். முதலாவது ஜனாதிபதி கோட்டபாயவின் நிகழ்கால அரசியலை பாதுகாத்தார். நாமல் ராஜபக்‌ஷவின் எதிர்கால அரசியலை பாதுகாக்க முற்பட்டார். அத்துடன், தனக்கு மீதமுள்ள கொஞ்சநஞ்ச கௌரவத்தையாவது தக்க வைத்துக் கொள்ள முனைந்தார்.

பிரதமர் இராஜினாமாச் செய்த பிறகு, அடுத்த பிரதமர் யார் என்ற கேள்விக்கு உடனடியாக விடை கிடைக்கவில்லை. பிரதமரை வெளியேறச் சொல்லி வலியுறுத்திய தரப்பினர் எல்லோரிடமும் அடுத்த பிரதமர் யார் ? வேலைத்திட்டம் என்ன? என்ற விடயங்கள் எல்லாம் கையில் இருந்திருக்க வேண்டும்.

முதலில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரதமராகலாம் என்ற கணிப்புகள் அதிகமிருந்தது. அனுர குமார திசாநாயக்க வழக்கம்போல சமூக வலைத்தள கருத்துக் கணிப்புக்களில் முன்னணியில் இருந்தார். இதற்கப்பால் கரு ஜயசூரிய, டளஸ், தினேஸ் போன்ற வேறுபலரின் பெயர்களும் அடிபட்டன.

ஆனால், ஜனாதிபதி ஆரம்பத்தில் இருந்து ஒரே விடயத்தையே திரும்பத் திரும்ப கூறிக் கொண்டிருந்தார். ‘பெரும்பான்மையை நிரூபிப்பவருக்கு பிரதமர் பதவி வழங்கத் தயார்’ என்பதே அந்த தாரக மந்திரமாகும்;.

மறுபுறத்தில், ‘ஜனாதிபதி பதவி விலகினாலேயே தாம் பொறுப்பேற்க தயார்’ என்று சாத்தியமற்ற ஒரு கோரிக்கையை முன்வைத்துக் கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் அதற்கு நியாயங்கள் உள்ளன என்பது வேறுவிடயம்.

இந்த இழுபறிநிலை, உண்மையில் ராஜபக்‌ஷவினருக்கு சாதகமாகப் போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில், ராஜபக்‌ஷவினர் தமது எதிர்காலம் பற்றி அச்சப்படுவதாக தெரிகின்றது. அதனாலேயே அவர்கள் யாப்புத் திருத்தங்கள் பற்றிக்கூட சிந்தித்தார்கள் எனலாம்.

எனவே, தமக்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பான ஒருவரை அவர்கள் விரும்பினார்கள். அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க முதன்மைத் தெரிவாக இருந்தார். ரணிலை நியமிப்பது என்று முடிவெடுத்த பிறகு, அதனை நிறைவேற்ற ஜனாதிபதி கோட்டபாய அவசரப்பட்டார். காலம் பிந்தினால் அது சாத்திமற்றுப் போகலாம் என அவர் நினைத்திருக்கக் கூடும். பலரும் எதிர்த்ததையோ ஜனாதிபதி கண்டுகொள்ளவில்லை.

இந்தப் பின்னணியில், பெரும்பான்மையை நிரூபிப்பவருக்குத்தான் பிரதமர் பதவி என்று முன்னர் கூறிவந்த ஜனாதிபதி. ஒரேயொரு எம்.பியை, கொண்ட ஐ.தே.கட்சியின் தலைவரான (தேசியப்பட்டியல் எம்.பி.) ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தார்.

கடைசிக் கட்டத்தி;ல் சஜித் பிரேமதாசவின் ஆளுமை மீது பல சந்தேகங்கள் எழுந்தன. அவர் இந்த சுமையை தூக்கும் வல்லமை கொண்டவரில்லை எண்ணுமளவுக்கு போக்குகள் அமைந்திருந்தன. அந்த வகையில், ரணில் ஒரு நல்ல தெரிவாக பார்க்கப்படலாம்.

அவர் வந்த பிறகு டொலரின் பெறுமதியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சில பொருளாதார குறிகாட்டிகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ரணில் அல்லாமல் யார் புதிய பிரதமராக பதவியேற்றிருந்தாலும், இந்த சிறுமாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் என்பதே யதார்த்தமாகும்.

அந்த வகையில், மக்களின் அவசர எதிர்ப்பாகவுள்ள பொருளாதார மீட்சிக்கு ரணில் அடித்தளமிடுவார் என நம்பலாம். அவரால் நாட்டின் பொருளாதாரம் சிறப்படையும் வாய்ப்புள்ளது. சர்வதேச தொடர்பும், பொருளாதார விவகாரங்களை சாதுரியமாக கையாளும் ஆளுமையும் சஜித்தை விட அவருக்கு உள்ளது.

ஆனால், மக்களின் இறுதி எதிர்பார்ப்பு இதுவல்ல! ‘அரகலய’ ஆர்ப்பாட்டக்காரர்களோ அல்லது இயங்குநிலையில் உள்ள மக்களோ ரணிலை பிரதமராக கொண்டு வருவதற்காக இந்த எழுச்சியை தொடங்கவில்லை. ஏன் சஜித் கூட அவர்களது தெரிவாக இருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

ராஜபக்‌ஷவினர் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதுடன், நாட்டையும் மக்களையும் உண்மையாக நேசிக்கும் கபடமற்ற புதிய ஆட்சியாளர்கள் உருவாக வேண்டும். அதன் ஊடாக இலங்கையில் ஆட்சி முறை மாற்றம் ஒன்றுக்கான கதவுகள் திறக்கப்பட வேண்டும் என்பதே இறுதி நோக்கமாக இருந்தது.

ஆனால், ரணிலை மீண்டும் அப்பதவிக்கு கொண்டு வந்ததன் மூலம் மக்களின் அந்த எதிர்பார்ப்பு தந்திரமான முறையில் மழுங்கடிக்கப்பட்டுள்ளது.

எனவே, புதிய பிரதமரால் பொருளாதாரம் கொஞ்சமேனும் மீட்சி பெறும் என்று எதிர்பார்த்தாலும், அரசியல் ரீதியாகவோ ஆளுகை முறைமையிலோ மக்கள் பெரிய மாற்றங்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது. அத்துடன், ராஜபக்‌ஷவினர் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள் என்பதை கனவில் கூட நினைக்கத் தேவையில்லை.

புதிய பிரதமரின் வருகை ராஜபக்‌ஷ குடும்பத்தைப் பொறுத்தவரை ஒரு வரப்பிரசாதம் எனலாம். கடந்த காலங்களில் ராஜபக்‌ஷ தரப்பை ரணிலும், ரணில் (மற்றும் மைத்திரி) தரப்பை ராஜபக்‌ஷ குடும்பமும் பரஸ்பரம் பாதுகாக்கும் விதத்தில் திரைமறைவில் செயற்பட்டதை நாம் மறந்து விடவில்லை.

இம்முறை ரணில் விக்கிரமசிங்க அவ்விதம் செயற்படுவதற்கான புறச் சூழல்கள் இல்லை. அதனையும் தாண்டி, பல தரப்பினரும் அனுமானிப்பதைப் போல வழக்கம்போலவே இம்முறையும் அவர் செயற்படுவார் என்றால், எல்லா வகையிலும் மக்களை விட ராஜபக்‌ஷவினருக்கே அது இலாபமாக அமையும்.

இந்நிலையில், தமது சாம்ராஜ்யத்தை சரித்தமைக்காக கோட்டா, பசிலை நோக்கி மஹிந்த எதிர்வினையாற்றுவார் என்றும் பரவலாக ஒரு கதை உலாவுகின்றது.

இதற்கிடையில், இப்போதே அரசியல் குழப்பங்கள் தலையெடுக்கத் தொடங்கிவிட்டன. பெரும்பான்மையை நிரூபிக்காமலேயே பிரதமரை நியமித்தமையால், இப்போது அதனைச் செய்வது பெரும்பாடாகியுள்ளது.

மொட்டுக் கட்சியின் ‘மறைமுகமான பிரதமர்’ போலவே புதிய பிரதமர் செயற்படுவார் என்ற கருத்துக்கள் பரவலாக முன்வைக்கப்படுகின்றன. புதிய அமைச்சர்கள், பிரதம கொறடா, அவைத் தலைவர் நியமனங்களும் அதனை மெய்ப்பிப்பதாகவே அமைந்துள்ளன.

இந்நிலையில், அவர் ராஜபக்‌ஷ குடும்பத்தின் விசுவாசியாக செயற்படுவார் என்பதும், வழக்கம்போல இரகசிய காய் நகர்த்தல்களை மேற்கொள்வார் என்பதும், அத்துடன் அவரது மேற்குலக மர்ம உறவும், அவரை அரசியல் கட்சிகள் ஆழமாக நம்புவதற்கு தடங்கலாக உள்ளன.

இதேவேளை, சிறுபான்மையினர் விடயத்தில் ராஜபக்‌ஷவினருக்கும் ரணிலுக்கும் பெரிய வித்தியாசங்கள் இல்லை. ஒருவர் வெளிப்படையாக செய்பவர். மற்றவர் மறைமுகமாக செய்பவர் என்பதுதான் வேறுபாடு.

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இதற்கு நிறையவே கடந்தகால பட்டறிவுகள் உள்ளன. எனவே சிறுபான்மைக் கட்சிகள் தயக்கம் காட்டுகின்றன. ஆனால் ஆதரிக்கமாட்டாது என்று சொல்ல முடியாது. தாம் விரும்பிய பிரதமர் என்ற வகையில் மொட்டுக் கட்சி ஆதரவளிக்க முன்வந்துள்ளது. வேறு கட்சிகள் இந்த அரசாங்கத்தில் பங்குபற்றவில்லை என்றால், மொட்டு ஆட்சியின் ‘இரண்டாம் பாகமாகவே’ இது அமையும்.

இந்தப் பின்புலத்தில், புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மக்களது கோரிக்கைகளை நிறைவேற்றாமல், ராஜபக்‌ஷவினரின் அல்லது வெளிநாட்டுச் சக்திகளின் ஏவலுக்கு செவிசாய்ப்பவாரக செயற்படுவாராயின், ‘அரகலய் இண்டாம் பாகமும்’ காலத்தால் தவிர்க்க முடியாததாக இருக்கலாம்.

## கடிதங்கள்

### ஆழ் கடல் மீனவர்களும் பாதிப்பு





தற்போதைய எரிபொருள் நெருக்கடி நிலைமை காரணமாக ஆழ் கடல் மீனவர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை சல்லி கிராம மீனவர்களும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக கடலுக்கு செல்ல முடியவில்லை என கவலைத் தெரிவிக்கும் மீனவர்கள், இதனால், வாழ்வாதார மீனவத் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதாயின் நாளாந்தம் சுமார் 40 லீற்றருக்கும் அதிகமான மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சென்றால் அது கிடைப்பதில்லை. கடலுக்குச் செல்லவேண்டிய நேரத்தில், எரிபொருளுக்காக வரிசையில் நிற்கவேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது என்றும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

போதியளவான எரிபொருள்கள் கிடைக்காமையால், இயந்திரப் படகு மூலம் செல்ல முடியாது. மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி குடும்பத்தை நடாத்துகின்றோம். இந்த மண்ணெண்ணெய் தட்டுப் பாட்டால் தொழில் இன்றி வாழ்வாதாரத்தை இழந்துள்ளோம் என்றும் மீனவர்கள் கவலைத் தெரிவிக்கின்றனர்.

ஹஸ்பர்

# தோழியின் திருமணத்தில் ராஷ்மிகா



தமிழில் கார்த்தி நடித்த 'சுல்தான்' என்ற திரைப்படத்தில் நடித்த நடிகை ராஷ்மிகா மந்தனா, தற்போது விஜய் நடித்து வரும் 'தளபதி 66' திரைப்படத்தில் நாயகியாக நடித்து வருகிறார்.

இந்த நிலையில் சமூக வலைதளங்களில் ராஷ்மிகா மந்தனாவுக்கு 31 மில்லியனுக்கும் அதிகமான பின்தொடர்பவர்கள் உள்ளனர். இதனால், அவர் பதிவு செய்யும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் மிகப்பெரிய அளவில் வைரலாகும்.

இந்த நிலையில் அண்மையில், நிகழ்ந்த தனது நெருங்கிய தோழியான ராகினி என்பவரின் திருமணத்தில் கலந்து கொண்ட புகைப்படங்களை ராஷ்மிகா பதிவு செய்துள்ளார்.

அதில், தனது தோழி திருமண அலங்காரத்தில் அழகாக இருந்ததாகவும் அவரை பார்த்து தான் ஆச்சரியப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்த புகைப்படங்களை அவர் பதிவு செய்துள்ள நிலையில் அந்த புகைப்படங்கள் தற்போது இணையதளங்களில் வைரலாகி வருகிறன.



## வாரிசு நடிகர்கள் அவித்த முட்டை

பொலிவுட் நடிகைகளின் வாரிசுகள் அவித்த முட்டை போல் இருக்கிறார்கள் என்று பிரபல நடிகை கங்கனா ரனவத் சர்ச்சைக்குரிய விமர்சனம் செய்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சமூக வலைதளங்களிலும் சரி, பேட்டிகளிலும் சரி, பொது மேடைகளிலும் சரி சர்ச்சைக்குரிய வகையில் அவ்வப்போது பேசுபவர் நடிகை கங்கனா ரனவத், தமிழில் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாறு திரைப்படமான 'தலைவி' என்ற திரைப்படத்திலும், ஏராளமான மலையாள திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

இவர் அண்மையில் அளித்த பேட்டியின்போது பொலிவுட் நடிகர்களின் வாரிசுகள் ரசிகர்களோடு ஒன்றிணைய முடியவில்லை என்றும் அவர்கள் வெளிநாட்டில் படித்து, ஆங்கிலம் மட்டுமே பேசி, ஹொலிவுட் திரைப்படங்களை மட்டுமே பார்த்து திடீரென பொலிவுட் திரைப்படங்களில் நடிப்பதால் அவர்கள் ரசிகர்களுடன் ஒன்றிணைய முடியவில்லை என்றும் கூறுகின்றனர்.

ஆனால் அதே நேரத்தில் தென்னிந்திய சினிமாக்கள் ரசிகர்களை கவர்ந்துள்ளது என்றும் தென்னிந்திய ஹீரோக்கள் ரசிகர்களோடு ரசிகர்களாக இருக்கின்றார்கள் என்றும், அதனால்தான் பொலிவுட் திரைப்படங்களை விட தெலுங்கு மற்றும் கன்னட திரைப்படங்கள் மிகப்பெரிய அளவில் வசூல் செய்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

## 'நினைத்தது நடக்கவில்லை'

கமலஹாசனின் 'விக்ரம்' திரைப்படத்தில் நடிகர் சூர்யா சிறப்பு தோற்றத்தில் நடித்து உள்ளதாக செய்தி வெளியான நிலையில் இந்த தகவல் குறித்து பேசிய லோகேஷ் கனகராஜ் இந்த விஷயத்தில் 'நான் நினைத்தது நடக்கவில்லை' என்று கூறினார்.


உலக நாயகன் கமல்ஹாசன் நடிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவான 'விக்ரம்' திரைப்படத்தின் பாடல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்றது.

இந்த விழாவில் ரஜினிகாந்த், விஜய், சூர்யா உள்பட பல பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர்கள் கலந்து கொள்ளாதது ரசிகர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது .

இந்த நிலையில் இந்தத் திரைப்படத்தில் சூர்யா சிறப்பு



தோற்றத்தில் நடித்து உள்ளதாக செய்தி வெளியானது மட்டுமின்றி அவர் 'விக்ரம்' படப்பிடிப்பில் கலந்து கொண்ட புகைப்படங்கள் இணையதளங்களில் வைரலானது.



## நடிகை கஸ்தூரியா இது?


நடிகை கஸ்தூரி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வேற லெவல் கவர்ச்சி புகைப்படத்தை வெளியிட்டுள்ள நிலையில் அந்த புகைப்படம் வைரலாகி வருகின்றது.

நடிகைக கஸ்தூரி ஏராளமான திரைப்படங்களில் நடித்துள்ளார். தற்போது இவர் 'மிஸ்டர் பிரக்நெட்' உள்பட நான்கு திரைப்படங்களில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் சமூக வலைதளத்தில் குறிப்பாக இன்ஸ்டாகிராமில் எக்டிவாக இருக்கும் கஸ்தூரி, சினிமா மட்டுமின்றி அரசியல் கருத்துக்களையும் தைரியமாக பதிவு செய்வார். அவரது கருத்துக்கள் பரபரப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நடிகை கஸ்தூரி வேற லெவல் கவர்ச்சி புகைப்படம் ஒன்றை பகிர்ந்துள்ளார்.

## சரமாரி குத்து!



கமலஹாசன் நடித்த 'விக்ரம்' திரைப்படத்தில் நடித்த நடிகையின் வயிற்றில் ஜிம் பயிற்சியாளர் சரமாரியாக குத்தும் வீடியோ இணையதளங்களில் வைரலாகியுள்ளது.

கமல்ஹாசன் நடிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள 'விக்ரம்' திரைப்படம் ஜூன் மூன்றாம் திகதி வெளியாக உள்ளது.

இந்தத் திரைப்படத்தில் சின்னத்திரை பிரபலங்களான பிரபலங்களான ஷிவானி நாராயணன் மற்றும் மைனா நந்தினி நடித்துள்ள நிலையில் நடிகை சுவஸ்திகா கிருஷ்ணன் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார்.

ஏற்கெனவே மிஷ்கின் நடித்த 'சவரக்கத்தி', ஜீவாவின் 'கீ' உள்ளிட்ட திரைப்படங்களில் நடிகை சுவஸ்திகா கிருஷ்ணன் நடித்துள்ளார்.

இந்த நிலையில் நடிகை சுவஸ்திகா தனது சமூக வலைத்தளத்தில் ஜிம்மில் குத்துச்சண்டை பயிற்சி பெறும் காட்சியின் வீடியோவை வெளியிட்டுள்ளார்.

தஞ்சாவூர்

# குரங்குக்கு அவசர புத்தி

### தினகரனுக்கா, பழனிசாமிக்கா என விவாதம்

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் நடந்த தன் ஆதரவாளர் வீட்டு திருமண விழாவில் பங்கேற்றிருந்த சசிகலா, "குரங்குக்கு அவசர புத்தி" என்ற கதையுடன் கூடிய உரை, தமிழக அரசியலில் சர்ச்சையை ஏற்படுத்திவிட்டது.



அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க) உண்மையான தொண்டர்களின் தியாகத்தால் உருவானது. எதிர்க்கட்சியினர் எத்தனை கணக்குகள் போட்டாலும் நான் இருக்கும் வரை இந்த இயக்கத்தை யாராலும் அழிக்க முடியாது. கட்சியை காப்பாற்றி மீண்டும் வலிமை கொண்ட இயக்கமாக உருவாக்க தகுந்த நேரம் வந்து விட்டது என்றார்.

அதன்பின் பின்னர் குரங்கு கதையொன்றை சொன்னார். மாங்கொட்டையை ஊன்றி மரமாக வளர செய்தால் இஷ்டத்திற்கு மாம்பழங்களை பறித்துச் சாப்பிடலாம் என ஒரு குரங்கு மாங்கொட்டையை மண்ணுக்குள் புதைத்து நீரூற்றியது. சிறிது காலமாகியும் செடி வளரவில்லை. குரங்கிற்கோ அவசரம். அந்த அவசர புத்தி குரங்கு, மண்ணில் புதைத்து வைத்திருந்த மாங்கொட்டையை எடுத்து பார்ப்பதும் மீண்டும் மண்ணில் புதைப்பதுமாக இருந்தது. இதனால் செடி முளைக்கவில்லை.

ஆத்திரமடைந்த குரங்கு மாங்கொட்டையை தூர எறிந்து விட்டு வருத்தப்பட்டது. குரங்கின் அவசர புத்திதான் அதற்கு காரணம். விளைச்சல் கிடைக்க வேண்டும் என்றால் சில காலம் பொறுமை காக்க வேண்டும். அதுபோல நம் செயல்கள் இருக்க வேண்டும். அப்படி செயல்பட்டால் தான் நம் இயக்கம் வலிமை பெறும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்த குரங்கு கதையை தினகரனுக்காக தான் கூறினார் என ஒரு தரப்பினரும் பழனிசாமிக்காக கூறினார் என மற்றொரு தரப்பினரும் பெரும் விவாதமே நடத்தி வருகின்றனர்.

சென்னை

## ஹிஜாப்புக்கு தடையில்லையென அரசு அறிவிக்கவேண்டும்



கள்ளக்குறிச்சியில் உள்ள களமருதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஹிஜாப் அணிந்துகொண்டு தேர்வெழுதச்சென்ற மாணவிகளுக்கு உள்ளே நுழைய அனுமதி மறுக்கப்பட்ட செய்தியானது பெரும் அதிர்ச்சியளிக்கிறது என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

கடந்த மாதம் சென்னை, தாம்பரத்திலுள்ள சங்கர வித்யாலயா பள்ளிக்கு மாணவர் சேர்க்கைக்குச்சென்ற பெண்ணின் ஹிஜாப்பை, அப்பள்ளி நிர்வாகம் அகற்றக்கோரிய நிலையில், தற்போது கள்ளக்குறிச்சியிலும் அதேபோன்றதொரு நிகழ்வு அரங்கேறியிருப்பது தேவையற்ற சலசலப்பை உருவாக்குகிறது.

இந்நிலையில், தமிழக பாடசாலைகளில் ஹிஜாப் அணிவதற்கு தடையில்லையென அரசு அறிவிக்கவேண்டும் என்றும் அவ்வறிக்கையில் தெரித்துள்ளார்.

புதுடெல்லி



## லும்பினியில் மோடி தரிசனம்

நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தியூபாவின் அழைப்பின் பேரில் பிரதமர் நரேந்திர மோடி, புத்த பூர்ணிமாவையொட்டி ஒரு நாள் அரசுமுறை பயணமாக நேபாளத்துக்கு நேற்று (16) சென்றுள்ளார்.

2014ம் ஆண்டுக்குப் பின்னர் பிரதமர் மோடி மேற்கொள்ளும் ஐந்தாவது நேபாள பயணம் இதுவாகும்.

புத்தரின் பிறப்பு, ஞயாணோதயம், புத்தரின் இறப்பு ஆகிய மூன்றுமே மே மாதம் பௌர்ணமி நாளில் புத்த பூர்ணிமாவாக பௌத்தர்களால் கொண்டாடப்படுகிறது. லும்பினியில் புத்தர் பிறந்த இடத்தில் உள்ள மாயாதேவி கோவிலில் தரிசனம் செய்தனர்.

நாகர்கோவில்



## புனிதர் பட்டம் பெற்ற முதல் தமிழர்

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மறைசாட்சி தேவசகாயத்துக்கு ரோமில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற விழாவில் புனிதர் பட்டத்தை போப் பிரான்சிஸ் வழங்கினார். இதன் மூலம் புனிதர் பட்டம் பெற்ற முதல் தமிழர் என்ற பெருமையை தேவசகாயம் பெற்றார் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றனார்.

கன்னியாகுமரி மாவட்டம் நட்டாலத்தைச் சேர்ந்தவர் தேவசகாயம். நீலகண்டன் என்ற இயற்பெயர் கொண்ட இவர், திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மாவின் அரசவை அலுவலராக இருந்தார். மேக்கோட்டைச் சேர்ந்த பார்கவியை திருமணம் செய்துகொண்டார்.

1741 ஆம் ஆண்டு திருவிதாங்கூர் படைகளுக்கும், டச்சு படைகளுக்கும் இடையே நடைபெற்ற போரில் டச்சு தளபதி பெனடிக்ட் டிலனாய், மன்னர் மார்த்தாண்ட வர்மாவால் போர் கைதியாக சிறை பிடிக்கப்பட்டார். கத்தோலிக்கரான டிலனாயின் நண்பரானார் நீலகண்டன். பின்னர் 1745 மே 14ஆம் திகதியன்று வடக்கன்குளத்தில் திருக்குடும்ப கோயிலில் திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவ மதத்தை நீலகண்டன் தழுவினார்.

அதன்பின் ராஜதுரோகம், குலதுரோகம் போன்ற குற்றங்கள் சாட்டப்பட்டு, 1749 பெப்ரவரி 23 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட தேவசகாயம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவரது பதவிகள் பறிக்கப்பட்டன. பல துன்பங்களுக்கு உட்படுத்தப்பட்டார். யாரும் அறியாத வகையில் கொன்றுவிட திட்டமிடப்பட்டது.

1752 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி நள்ளிரவில் கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி காற்றாடிமலையில் 5 துப்பாக்கி குண்டுகளால் தேவசகாயம் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடல் பாறையிலிருந்து கீழே தள்ளிவிடப்பட்டு, வனவிலங்குகளுக்கு உணவாக்கப்பட்டது.

மும்பை

## மனைவியர் தினம் கொண்டாட வேண்டும்

மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ராம்தாஸ் அத்வாலே இந்திய குடியரசுக் கட்சியின் (ஏ) தலைவர் ஆவார். 10 ஆண்டுகளுக்கு மேல் பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) தலைமையிலான கூட்டணியில் உள்ள இவர் தற்போது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணை மந்திரியாக உள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம் சாங்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர் கூறியதாவது:-

தாய் நம்மைப் பெற்று நமக்கு வாழ்க்கையை உருவாக்கி தந்தார். அந்த வாழ்க்கைக்கு துணையாக மனைவி முக்கியமான காலகட்டத்தில் வருகிறார்.

நமது நல்லது, கெட்டது என அனைத்திலும் மனைவி உடன் இருக்கிறார். ஒவ்வோர் ஆண்மகனின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறார் என கூறுவார்கள். இங்கு பெரும்பாலானவர்களுக்கு அந்த நபர் மனைவியாகத்தான் இருப்பார். எனவே மனைவியர் தினமும் கொண்டாடப்பட வேண்டும் எனக் கூறினார்.

அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளில் மனைவிக்கு நன்றி பாராட்டும் தினம் ஏற்கெனவே கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## வழுக்கைத் தலை ஆண்களை கேலி செய்வதும்

# 'பாலியல் குற்றமே'

“வழுக்கைத் தலையாக இருக்கும் ஆண்களைப் பணியிடங்களில் கேலி செய்தால் அது பாலியல் குற்றமாகக் கருதப்படும்” என்று இங்கிலாந்து நாட்டின் தொழிலாளர் தீர்ப்பாயம் அறிவித்துள்ளது.

இங்கிலாந்திலுள்ள மேற்கு யார்க்ஷயர் நகரத்தின், ஒரு தனியார் நிறுவனத்தில் 24 வருடங்களாகப் பணியாற்றி வந்த ‘டோனி பின்‘ என்ற நபர் கடந்த வருடம் மே மாதத்தில் பணியிலிருந்து நீக்கப்பட்டார். இதுபற்றி அவர் நாட்டின் தொழிலாளர் தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்தார்.

அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது, ”என் நிறுவனத்தில் இருக்கும் உயரதிகாரி என்னை வழுக்கை என்று கேலி செய்தார். அதை நான் எதிர்த்ததால் நியாயமில்லாமல் என்னை பணியிலிருந்து நீக்கி விட்டார் “ என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ”பணிபுரியும் இடங்களில் பெண்களது உறுப்புகளை



கிண்டல் செய்வது பாலியல் குற்றம். அதைப்போன்றே ஆண்களின் வழுக்கையை கிண்டல் செய்வதும் பாலியல் குற்றத்தில் சேரும். எனவே அந்த நபருக்கு உரிய நிறுவனம் தகுந்த இழப்பீடு அளிக்க வேண்டும் ”என்று நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

பாகிஸ்தான்

## மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில்

# சீக்கியர்கள் இருவர் உயிரிழப்பு

பாகிஸ்தானில், பெஷாவர் நகரில் நேற்று முன்தினம்(15) மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சீக்கியர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பகுதியில் வர்த்தகம் செய்து வந்த சுல்ஜீத் சிங் மற்றும் ரஞ்சீத் சிங் ஆகிய இருவரே மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்களால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சீக்கியர்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்து அந்நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இக்கொலைச் சம்பவத்திற்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், ” பாகிஸ்தான், இங்கு வாழக்கூடிய மக்கள் அனைவருக்கும் உரியது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள். குற்றவாளிகளை கண்டுபிடிக்க உயர்மட்ட விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கிறேன். குற்றவாளிகள் கைது செய்யப்பட்டவுடன் கடும் தண்டனை அளிக்கப்படும் ”எனத் தெரிவித்துள்ளார்.



பெரு

# பஸ் விபத்தில் 11 பேர் உயிரிழப்பு; 34 பேர் படுகாயம்

பஸ் ஒன்று சுமார் 330 அடி செங்குத்தான பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்த சம்பவம் தென் அமெரிக்க நாடான பெருவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தலைநகர் லிமா நோக்கி சென்ற பஸ்ஸே கடந்த 14 ஆம் திகதி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் இரு குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 34 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சீனா



# மிதக்கும் ஆகாயக் கப்பல்

மிதக்கும் ஆகாயக் கப்பலொன்றை உருவாக்கி சீனா சாதனை படைத்துள்ளது.

`ஜிமு நம்பர் 1` என பெயரிடப்பட்ட இவ் ஆகாயக் கப்பலானது சோதனையோட்டத்தின் போது எவரெஸ்ட் சிகரத்தில் 4,300 மீற்றர் உயரத்தில் உள்ள தளத்தில் இருந்து வினாடிக்கு 30 மீற்றர் வேகத்தில் மேல் நோக்கி சென்று சுமார் , 9 ,0 32 மீற்றர் உயரத்தை எட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது



குறித்துக் கருத்துத் தெரிவித்த சீன விஞ்ஞானிகள் ”இவ் மிதக்கும் கப்பலின் மீது பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கருவிமூலம் வளிமண்டல வாயுக்கள் குறித்தும், வானில் நிகழும் நீராவி பரிமாற்றம் குறித்தும் தரவுகளைப் பதிவு செய்ய முடியும் ” எனத் தெரிவித்துள்ளனர்.

லண்டன்

# தங்கத்தில் ஊதியம்

நாட்டில் நிலவும் பணவீக்கத்தை எதிர் கொள்வதற்காக நிறுவனமொன்று தனது நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தங்கத்தில் ஊதியம் வழங்க முடிவு செய்துள்ள சம்பவம் உலகளவில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



லண்டனை சேர்ந்த நிதி சேவைகள் நிறுவனமான டேலி மணி நிறுவனமே இம்முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந் நிறுவனத்தின் தலைமை அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் ”நாட்டில் நிலவும் பணவீக்கம் காரணமாக விலைவாசி மற்றும் செலவுகள் கணிசமாக உயர்ந்து கொண்டே வருகின்றன. எனவே காலம் காலமாக பணவீக்கத்தை எதிர்கொள்ளும் ஆயுதமாகத் தங்கம் ூத்தப்படுவதனால், தங்கத்தில் சம்பளம் கொடுப்பதுவே சிறந்த முடிவாக நாங்கள் கருதுகின்றோம். அத்துடன் இந்நிறுவனத்தில் சுமார் 20 ஊழியர்கள் மாத்திரமே வேலை செய்கின்றனர்.

அதனால் சோதனை அடிப்படையில் தங்கத்தில் சம்பளம் கொடுத்துப் பார்க்கலாம் என்றும் முடிவு செய்துள்ளோம். அந்தவகையில் விருப்பப்பட்ட ஊழியர்கள், இனி த்திற்குப் பதிலா கத் தங்கத்தில் சம்பளம் வாங்கிக் கொள்ள லாம் என அறிவித்துள்ளோம் ” என்றார்.

இந்நிலையில் இவரது அறிவிப்பானது அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.


அமெரிக்கா

# தேவாலயத்தில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் உயிரிழப்பு

தேவாலயத்தில் வைத்து மர்ம நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

லகூனா வுட்ஸ் பகுதியில் உள்ள தேவாலயத்திலேயே நேற்று முன்தினம் (15) பிற்பகல் 1 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த தேவாலயத்திற்குள் நுழைந்த மர்ம நபர் ஒருவர் அங்கிருந்த மக்களைப் பார்த்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், இதன் போது ஒருவர்



சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனவும், ஐவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தாக்குதல் நடத்திய அந்நபரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# பங்களாதேஷ் நிதானமான ஆரம்பம்

இலங்கைக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், சட்டோகிராமில் நேற்று முன்தினம் ஆரம்பமான முதலாவது டெஸ்டின் நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் தமது முதலாவது இனிங்ஸில் நிதானமான ஆரம்பத்தை பங்களாதேஷ் பெற்றுள்ளது.

நேற்றைய இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இலங்கை தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ் மூலம் இனிங்ஸை நகர்த்தியது.

பின்னர் 66 ஓட்டங்களுடன் நயீம் ஹஸனிடம் சந்திமால் வீழ்ந்ததுடன், அடுத்து வந்த நிரோஷன் டிக்வெல்ல, ரமேஷ் மெண்டிஸ், லசித் எம்புல்தெனிய ஆகியோர் நயீம் ஹஸன், ஷகிப் அல் ஹஸனிடம் வீழ்ந்தனர். தொடர்ந்து விஷ்வ பெர்ணாண்டோவின் இணைப்பாட்டத்தில் மத்தியூஸ் ஓட்டங்களைப் பெற்றபோதும், நயீம் ஹஸனிடம் அசித பெர்ணாண்டோவிடம் வீழ்ந்ததைத் தொடர்ந்து இறுதி விக்கெட்டாக 199 ஓட்டங்களுடன் மத்தியூஸும் நயீம் ஹஸனிடம் வீழ்ந்தார். தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 397 ஓட்டங்களை இலங்கை பெற்றது. பந்துவீச்சில், நயீம் ஹஸன் 6, ஷகிப் அல் ஹஸன் 3, தஜியுல் இஸ்லாம் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகின்ற பங்களாதேஷ் நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 76 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், தமிம் இக்பால் 39, மஹ்முடுல் ஹஸன் ஜோய் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலுள்ளனர்.



## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் சிற்றி வெஸ்ட் ஹாம் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியது.


சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜக் கிரெலிஷ் பெற்றதோடு, மற்றைய கோலானது ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. வெஸ்ட் ஹாம் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஜரோட் பவன் பெற்றிருந்தார்.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற பிரென்ட்ஃபோர்ட்டுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றது. எவெர்ற்றன் சார்பாக, டொமினிக் கல்வேர்ட்-லூயின், றிஷலிஷன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பிரென்ட்ஃபோர்ட் சார்பாக, யோனெ விஸ்ஸா, றிக்கோ ஹென்றி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 90 புள்ளிகளுடன் சிற்றி முதலிடத்தில் காணப்படுகின்றது. ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள லிவர்பூல் 86 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், 70 புள்ளிகளுடன் செல்சி மூன்றாமிடத்திலும் காணப்படுகின்றது. நான்காமிடத்தில் 68 புள்ளிகளுடன் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் காணப்படுகின்றது.

## ஐ.பி.எல்:

# லக்னோவை வென்ற ராஜஸ்தான்



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான், யஷஸ்வி ஜைஸ்வாலின் 41 (29), தேவ்டுட் படிக்கல்லின் 39 (18), சஞ்சு சாம்ஸனின் 32 (24), ட்ரெண்ட் போல்டின் ஆட்டமிழக்காத 17 (09) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ரவி பிஷ்னோய் 4-0-31-2, ஜேஸன் ஹோல்டர் 2-0-12-1, ஆவேஷ் கான் 3-0-20-1, ஆயுஷ் படோனி 1-0-5-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 179 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய லக்னோ, ட்ரெண்ட் போல்ட் (2), பிரசீத் கிருஷ்ணா (2), இரவிச்சந்திரன் அஷ்வின், யுஸ்வேந்திர சஹால், ஒபெட் மக்கோய்யிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 24 ஓட்டங்களால் தோற்றது. துடுப்பாட்டத்தில், தீபக் ஹூடா 59 (39), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 27 (17) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக போல்ட் தெரிவானார்.

இதேவேளை, மற்றைய போட்டியில் நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸை வென்ற குஜராத் டைட்டான்ஸ் புள்ளிகள் பட்டியலில் முதலிரண்டு இடங்களுக்குள் வருவதை உறுதிப்படுத்திக் கொண்டது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை, ருத்துராஜ் கைகவாட்டின் 53 (49), நாரயண் ஜகதீசனின் ஆட்டமிழக்காத 39 (33) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மொஹமட் ஷமி 4-0-19-2, அல்ஸாரி ஜோசப் 3-0-15-1, ரஷீட் கான் 4-0-31-1, ரவிஸ்ரீனிவாசன் சாய் கிஷீர் 4-0-31-1, ஹர்டிக் பாண்டியா 2-0-8-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 134 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய குஜராத், ரித்திமான் சஹாவின் ஆட்டமிழக்காத 67 (57) ஓட்டங்களோடு 19.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், மதீஷ பத்திரண 3.1-0-24-2, மொயின் அலி 2-0-11-1, மிற்செல் சான்ட்னெர் 4-0-24-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக சஹா தெரிவானார்.

## மாவனல்ல இசுரு வி.க கிரிக்கெட் வசந்தம் தொடர்:

# சம்பியனான கண்டியன் வி.க

அஸ்ஹர் இப்றாஹிம்

மாவனல்ல இசுறு விளையாட்டுக் கழகம் ஒழுங்கு செய்திருந்த கிரிக்கெட் வசந்தம் தொடரில் மாவனல்ல கண்டியன் விளையாட்டுக் கழகம் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டது.

“இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை விளையாட்டுத்துறையினூடாக கட்டியெழுப்புவோம்” எனும் தொனிப்பொருளில் லகமுவ வித்தியாலய



மைதானத்தில் அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அணிக்கு 7 பேர் கொண்ட மேற்படி தொடரில், இலுக்வத்த விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து கண்டியன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 17 மே 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.